ஓம் சாமியே சரணம் ஐயப்பா!

ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப யாத்திரை குழு வெளியிடும்

# ஸ்ரீ ஹரிஹர ஜோதி மலர்



## 5வது மண்டல பூஜை பெருவிழா

**27 - 12 - 2002**

பூஜை தேவஸ்தானம்:

ஸ்ரீ அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

கொழும்பு-02.

இல: 155/1, யூனியன் பிளேஸ் கொழும்பு-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes from.....*

# Chatham Computer Cabin



**Computer Sales, Repairs, Network, Classes**
**Photocopy, Fax, Communication & Etc.**

**72 B, Chatham Street, Colombo-01.**

# MANIKKAM CLEARING & FORWARDING AGENCY

***Forwarding & Transport Agent for Hirdaramani Group***

***Office:***
***72 C, Chatham Street, Colombo01.***
***Tel: 384062  Fax: 384063***

***Residence:***
***160/5/3, Justice Akber Mawatha, Co.-02.***
***Tel: 307383  Mobile: 0777-769347***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியே சரணம் ஐயப்பா!

# ஸ்ரீ ஹரிஹர ஜோதி பஜனாமிர்தம்




வெளியீடு:

கொழும்பு கொம்பனித்தெரு

## ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப யாத்திரை குழு

155/1, யூனியன் இடம்,
கொழும்பு-02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியே சரணம் ஐயப்பா!

தொகுப்பு : கொம்பனித்தெரு
ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப யாத்திரை குழு

முதற்பதிப்பு : 27-12-2002

அச்சுப் பதிப்பு : ராஜேஸ்வரி பிரஸ் பிறைவட் லிமிட்டெட்
இல: 16, 18, குமாரன் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 324112, 329639
E-mail: rajesw@sltnet.lk

கனணி அமைப்பு : இரா. சிவபெருமாள்
16, குமாரன் வீதி,
கொழும்பு-11.

கனணி அமைப்பு
உதவி : ரங்கஜித்
16, குமாரன் வீதி,
கொழும்பு-11.

வெளியீடு : ஸ்ரீ ஹரிஹர சுதன்
ஐயப்ப யாத்திரை குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு சுவாமியின் பக்தி விளிம்பில்.........

ஓம் சற்குருநாதனே – சரணம் ஐயப்பா!

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருளாலும், கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாம் எமது ஹரிஹர சுதனின் திருவருளாலும் இவ்வாண்டும் எமது ஹரிஹர சுதன் யாத்திரை குழுவினரின் மண்டல பூஜையை முன்னிட்டு **'ஸ்ரீ ஹரிஹர ஜோதி மலர்'** வெளியிடுவதையிட்டு நானும் அகமகிழ்கின்றேன்.

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த பல ஆண்டுகளாக ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதமிருந்து சபரிமலை சென்று ஐயப்ப தரிசனம் கண்டு வருகின்றனர். இந்த ஐயப்ப தரிசனத்தை சிறப்புற செய்வதே ஐயப்பன் விரதம் ஆகும்.

நாம் அறிந்த விரதங்களிலே ஐயப்ப விரதமும் ஒன்றாகும். சபரி கிரீசனை போற்றித் துதிக்கும் இப்புண்ணிய காலமாகிய கார்த்திகை மாதத்திலே ஐயனை நினைத்து மாலை அணிந்து விரதமிருப்பது. உன்னதமான ஒரு செயலாகும். இக்காலங்களிலே விரதமிருந்து மாலை அணிந்த சுவாமிகள் ஐயப்பனாகவே கருதி போற்றப்படுகின்றனர். அவர்களின் இல்லங்கள் ஐயன் கோவில்களாகவே போற்றப்படுகின்றது. இதனையே "விரமிருக்கும் சாமிகளே உங்கள் வீடுகள் ஐயப்பன் கோயில்களே" என்று பாடப்படுகின்றது.

நாமும் சபரி மலை சாஸ்தவை எண்ணி நாற்பத்தொரு நாட்கள் சத்திய விரதமிருந்து, விரதமகிமையை மேம்படுத்துவோம். ஆண்டுதோறும் எமது சபரிமலை யாத்திரை குழுவின் யாத்திரை தொடர்ந்து இப்பார் முழுதும் ஐயப்ப மணம் கமல வேண்டும். என்று ஸ்ரீ ஹரிஹர சுதனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி - வணக்கம்

ஐயனை நம்பினோர் - கைவிடப்படார்!

இவ்வண்ணம்
ஸ்ரீ. சதீஸ்குமார்
(குருசாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



## பரப்பிரம்மமான ஐயப்பன்

ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா!

பரம்பொருளாக விளங்குகின்ற ஐயப்பனின் மெய்யடியார்களின் மகர ஜோதி விழாவின் ஐந்தாண்டு பூர்த்தி ஐயப்பன் கருணையால் சிறப்படைந்துள்ளது. இதனை முன்னிட்டு வெளியிடப்படும் "ஸ்ரீ ஹரிஹர ஜோதி மலருக்கு" எனது ஆசி உரையை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒளிப்பிளப்பாக விளங்குகின்ற எமது பரபிரம்மமான ஐயப்பன் தன்னை சரணடைந்த அடியவர்களுக்கு திருவருள் புரிந்து வருகின்றார். கலியுகத் தெய்வமாக விளங்கும் ஐயப்பனின் அருள்வேண்டி எமது ஆலயத்தில் பக்தி சிறத்தையுடனும் கட்டுப்பாடுடனும் பூஜை செய்து பிரார்த்தனை செய்து வருகிறார்கள். இந்த இறைபணி வருங்காலத்தில் சிறப்பாக வளர்ந்து மக்கள் நலம் பெற வாழ்த்துகிறேன்.

ஐயப்பன் மெய்யடியார்களின் வழிபாட்டிற்கு தனியான வசதியை சிறப்பாக செய்து கொடுக்க எண்ணியுள்ளோம். இதற்கு ஐயனின் அருள் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம்.

**குன்றும் குழியும் – கண்ணுக்கு வெளிச்சம்!**

**சாமியே சரணம் ஐயப்பா!**

ஆலய அரச நம்பிக்கை பொறுப்பாளர்
**திரு. கார்த்திகேசு கனகசபாபதி** J.P.
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
கொம்பனித்தெரு,
கொழும்பு-02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## மனதை பக்குவப்படுத்த ஒரே வழி

சாமியே சரணம் ஐயப்பா!

மனித இனம் எல்லோரும் ஒரே தாய் வயிற்றில் பிறப்பவர்கள். செயல், குணம், சூழல் பலவகையான சமூகம் இவற்றால் விரும்பத் தகாத செயல்களை செய்யத் தொடங்கிவிட்டான். இதன் காரணமாக பிறவிகளில் துன்பமே என்றாலும் இன்பமாக வாழவே விரும்புகிறான். சகிக்க முடியாத காலம் வரும்போது தேவ பிரார்த்தனைகளில் ஈடுபாடு கொள்கிறான்.

ஒரே தெய்வமாக அருள் சார்ந்து மனிதனை பக்குவப்படுத்த முடியாது. ஒரே தெய்வமாக, துறவு, தியாண மனத்துடன் வாழ்பவன் பத்தாயிரம் பேருக்கு ஒருவன்தான் அந்த நிலையை கடைப்பிடித்து ஒழுக முடியும். ஆகையால் எங்கள் இந்து மதம் பல கோணங்களில் ஊர்த் தெய்வம், கிராம தேவதை, மலைத்தெய்வம், வனத் தெய்வம், தேசத் தெய்வம், எல்லைத் தெய்வம், கற்பூர தெய்வம் என பல வகை வகுத்தனர். முருகனுக்குக் கூட குருசாமியென திருநாமம் ஒன்று உண்டு. தந்தைக்கு குரு உபதேசம் செய்தவன். பெற்றோரை பிரிந்தவன். ஊரில் இருக்கக் கூடாது என்று மயிலேறி மலை ஏறி நின்றான். அதைப்போல் ஐயப்ப சுவாமி சிவ நாராயண அருள் சக்தி தோற்றம் பெற்றார். வன மலை மத்தியில் இருந்து அருள்கின்றான். என் அண்ணன் முருகன், சூரபன்மனைப் பக்குவப்படுத்தி சாமீப பதவி கொடுப்பதற்கு பதிணெண் வகை ஆயுதங்களைக் கொண்டு போர்த்தொடுத்தான். ஐய்யப்பனும் "என்னிடம் வாருங்கள் மனப்பக்குவமாக எனது மாடத்தின் பதினெட்டு படிகளையும் ஏறி வாருங்க்ள தரிசணம் கிடைக்கும் இப்பிறவியுடன் சாமீப பதவி வாழ்வு உண்டாகும். துன்பம் என்ற சொல்லே தெரியாமல் போய்விடும் போரும் இல்லை பிறவியூரும் இல்லை. எல்லாம் ஐயனின் செயல்...

சாமியே சரணம் ஐயப்பா!

**எஸ். எஸ். சந்திரசேகர குருக்கள்**
ஜோதிடர்,
முருகன் ஜாதக நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## ஐயனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கிறேன்

சாமியே சரணம் ஐயப்பா!

ஐயனின் பாதமே சரணம் என்று ஐயப்ப சுவாமியின் தத்துவங்களை உணர்ந்தும் அதன் வழியில் பக்தி என்னும் வழிபாட்டு முறையை எடுத்துக் காட்டும் முகமாக ஐயப்பனின் திருவருளாகும். இன்றைய காலத்தில் பக்தியின் வழிபாட்டு முறையை எடுத்துக் காட்டும் முகமாக இவ்வழிபாடு அமைகிறது. எனவே இவ்வருடம் ஸ்ரீ ஹரி ஹர சுதன் ஐயப்ப யாத்திரைக் குழுவின் ஸ்ரீ ஹரி ஹர ஜோதி மலர் சிறப்புற அமையும். அதன் பயன் மேன்மேலும் வழிபாட்டு முறைக்கு அமைய வேண்டும் என்று எனது ஆசிகளைக் கூறிக்கொண்டு ஹரிஹர சுதன் ஐயப்பனின் திருவருளும் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

சாமியே சரணம் ஐயப்பா!

பிரதம குரு:
**பிரம்மஸ்ரீ இராம விஜயகுமாரக் குருக்கள்**
சிவாஹம கிரியா சிரோன்மணி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
கொம்பனித்தெரு,
கொழும்பு-02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## இறைபக்தியும் ஆத்மீக சிந்தனையும் வளர வேண்டும்!

சாமியே சரணம் ஐயப்பா!

கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப யாத்திரைக் குழுவினரால் சென்ற ஐந்து வருட காலமாக முறைப்படி ஆகம, மரபு முறையுடன் நடாத்தப்பட்டு வரும் இந்திய ஐயப்ப யாத்திரையும், அதனையொட்டி இவ்வருடம் நடைபெறும் மண்டல பூஜையும் எதிர்வரும் 27-12-2002ல் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. கண்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்கள் மத்தியில் இறைபக்தியும் ஆத்மீக சிந்தனையும் செறிந்து பரந்து வளர்வதற்கு சமூகம் குறிப்பாக இந்து இளைஞர்களிடையே ஐயப்பதாச பக்தி மிகுந்து வளர்ச்சியடைந்திருப்பது. பேருதவியாக இருக்கின்றது. என்பது எனது கருத்தாகும். ஆத்மீக வளர்ச்சி, ஒற்றுமை, கூட்டமைப்பு என்பன மக்கள் மத்தியில் வளர்ந்து வருவது ஓர் ஆரோக்கியமான செய்தியாகும்.

இந்த இந்திய யாத்திரையினை முன்னிட்டு "ஹரிஹர ஜோதி மலர்" மூன்றாவது வருடமாக இம்முறையும் இக்குழுவினரால் வெளியிட இருக்கும் இந்த நல்வேளையில், இம்மலர் செழிப்புறவும், யாத்திரிகர்களின் இந்திய விஜயம் செவ்வனே நிறைவேறி நாடு திரும்பவும் எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

"சிவநெறிச் செம்மல்"
**சி. தனபாலா J.P.**

"லீலா இல்லம்"
**62A,**
பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு-12.
23-12-2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## சாதி மத பேதம் ஒழிய வேண்டும்!

சாமியே சரணம் ஐயப்பா!

எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளால் ஐயப்பனின் பெருமையை வெளிப்படுத்துவதற்கும் இந்நூலுக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதர்களாகப் பிறந்த நாம் எந்த நிலையில் நின்றாலும், உண்மை மனிதன் பெறத்தக்க நிலையைப் பெற வேண்டும். நிலைக்கும் தன்மை உடையவன் மனிதன். பொன்னையோ பொருளையோ நினையாது ஐயப்பனின் பாதத்தையே நினைத்து அவனது ஜோதியை காண வேண்டும் என்ற நோக்கத்தோடு ஸ்ரீ ஹரிஹர ஜோதி மலராகிய 5 வருடத்தை கொண்டாடும் இம்மலர் மகத்தானது. சாதி மதமின்றி எல்லா சாமிமார்களும் கூடும் இடம் ஐயனின் சந்நிதானம் என்று கூறினால் மிகையாகாது. ஐயப்ப அடியார்களுக்கும் ஐயனின் திருவருள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உலகமெல்லாம் நீதி வெள்ளம் ஓட வேண்டும்
அதன் மூலம் உயிராகிய பயிர் தழைக்க வேண்டும்
ஜாதி மதம் பேதம் ஒழிய வேண்டும்
இளைஞர்கள் எல்லாம் ஒன்றுதிரட்டி மாலை அணிவித்து அவர்களின் உள்ளம் பண்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் பக்தியோடும் செய்யப்படும் இப்பூஜை நிச்சயம் வெற்றியளிக்கும். சாமிமார்களின் இப்புனித யாத்திரை சிறப்புற அமைய எல்லாம் வல்ல முருகப் பெருமானும், ஐயப்பனும் துணைபுரிவார்கள், என்று ஐயனின் பாதார விந்தங்களை பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

**திருமதி அம்பிகை பாலசுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாமியே சரணம் ஐயப்பா!

# சங்க தலைவரின் எண்ணத்திலிருந்து......

எல்லாம் வல்ல முருகப்பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து ஐயனின் அருள் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, இந்த ஐயப்ப பக்தர்களின் புனித யாத்திரை சிறப்புற வேண்டும், அவர்களுடைய அர்ப்பணமான இறைவழிபாடு சிறக்க வேண்டும் என்ற நோக்கில் வருடந்தோறும் 41 நாட்கள் விரதமிருந்து உடலை வருத்தி மனதை பக்குவப்படுத்தி எல்லா சிந்தனையும் இறைவன்பால் செலுத்தும் அவர்களுடைய இந்த தவத்திற்கும் அர்ப்பணத்திற்கும் முதலில் தலை வணங்குகின்றேன்.

இவர்களுடைய வழிபாட்டில் என்னை ஒரு ஐயப்ப அடியனாக ஆக்கி இந்த ஸ்ரீ ஹரிஹர ஜோதி மலருக்கு என் மனதில் தோன்றிய எண்ணத்தை வெளியிட வைத்த இறைவனுக்கு என் ஆத்மார்த்தமான நன்றியை தெரிப்பதோடு, இந்த வழிபாட்டில் என்னுடைய பங்களிப்பும் இடம்பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சியும், பூரிப்பும் அடைகின்றேன்.

இந்த புனித யாத்திரை சிறக்க எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

தூக்கிவிடப்பா ! - ஏத்திவிடப்பா!!

ஓம் சாமியே சரணம் ஐயப்பா!

**திரு. கா. தில்லைநாதன் J.P.**
விக்டோரியா நிறுவன அதிபர்
தலைவர்,
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின்

## இதயத்திலிருந்து

**கன்னிமூல கணபதி பகவானே சரணம்!**

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ தர்மசாஸ்தாவின் வழிபாடானது இன்று எமது இலங்கைத் திருநாட்டிலும் மிகப்பாரிய அளவில் பெருகி நடைபெற்று வருகின்றது. சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்னதாக எமது வணக்கத்திற்குரிய குருசுவாமி அமரர் க. ரவீந்திரகுமார் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வழிபாடானது இன்று பல சங்கங்களாக உருவெடுத்துள்ளது. ஐயனின் புகழானது மென்மேலும் பெருக வேண்டும் என்பதே எமது ஆசை.

ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப யாத்திரை குழுவினரால் இவ்வாண்டு வெளியிடப்படவிருக்கும் "ஸ்ரீ ஹரிஹர ஜோதி மலரானது சிறப்பாக அமையவும் குருசுவாமி சதீஸ்குமாரின் தலைமையில் நடைபெறவிருக்கும் தீர்த்த யாத்திரையானது சிறப்புறவும் என் சார்பிலும் எமது சங்கத்தின் சார்பிலும் வாழ்த்துக்கள் கூறிஅந்த ஹரி ஹர சுதனை பிரார்த்திக்கின்றோம்.

"பணி செய்யத் தெரிந்தவன் செய்து கொண்டிருக்கிறான். செய்யத் தெரியாதவன் அதை பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறான்."

சாமியே சரணம் ஐயப்பா!

**ஐயப்ப க்ஷேத்திரம்**
69, வன்றோயன் வீதி,
கொழும்பு-13.

குருசுவாமி:
**பொ. ரவீந்திரகுமரன்**
அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்
சபரிமலை தீர்த்த யாத்திரை குழு
(ஆன்மீக, சமூக சேவை நிலையம்)
11, ஆட்டுப்பட்டி ஒழுங்கை,
கொழும்பு-13.
தொ.பே: 384740, 385156
தொலைநகல்(Fax) 074-619592



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனை தெய்வமாக்கும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

# விரத மஹத்துவம்

எங்கும் நிறைந்தவன் இறைவன் அவனை அகக் கண்ணால் இதய சுத்தியுடன் மட்டுமே காண முடியும். இப்பூமியில் மண் உயிர்களாகிய நாம், எண்ணில் காலமாக பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றோம். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துவிட்டோம். நாம் பெறாத உயிர்களுமில்லை எம்மைப் பெறாத உயிர்களும் இல்லை.

உயிர்கள் எங்கிருந்து பிறக்கின்றன? ஏன் பிறக்கின்றன?, பின் எங்கு செல்கின்றன? விஞ்ஞானிகள் கூட கண்டிலர். மெய்ஞானி கூறுகிறார், உயிர் புல்லாகி, பூடாய் புழுவாய் மரமாகிப் பலவுருவாய் பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய் தேவராய், இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துவிட்டோம் என்று விஞ்ஞான யுகத்தில் அஞ்ஞானம் போக்கி மெய் ஞானத்தை சீர்தூக்கி பார்க்குமிடத்து அகண்டாகரமாய் எங்கும் நிறைந்து விளங்கும் ஐயப்பன் ஸ்ரீ பூதநாதன் எல்லா உயிர்களின் உடம்பிலும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார்.

நாம் பசி, தாகம், சோர்வு இவைகளை அலட்சியம் செய்ய வானலாவிய மரங்கள், முட்கள், கொடிகள், கற்பாறைகள், மேடு பள்ளங்கள் மட்டுமன்றி விஷ ஜந்துக்கள், மிருகங்கள் நிறைந்த வனந் தாண்டி இறைவன் சந்நிதியை சென்று பிம்பத்தில் சன்னித்தியமாகியிருக்கும் பகவானைத் தரிசித்து மகிழ்கின்றோம்.

நம் அகத்துள் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சபரிநாதனைக் காண வேண்டுமாயின் ஆசைத் தளைகள் அகங்காரம் என்ற மரங்கள், தீய எண்ணங்கள் என்ற மிருகத்தையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மாயவனத்தைக் கடந்தால்தான் ஐயன் ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்கலாம்.

இப்பூவுலகில் பகவான் ஐயன் அவதரித்து நீ என்னைக் காண வேண்டுமாயின் பற்றற்ற கருமம் செய், மனம் மாசு பெறாத தூய மனதில் ஞானம் ஒளிரும் என்று கூறினார்.

ஞானமே வாழ்க்கையின் இலட்சியம். நற்கருமத்திற்கு இடையூறு விளைவிப்பது காமம், வெகுளி, பேராசை, குரோதம், ஆணவம் முதலியன. இவற்றை வெல்ல "சுவாமியே சரணம் ஐயப்பா" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரக மந்திரத்தை தூய மனதுடன் ஓதி அவனது அருட் கடாற்சத்தைப் பெற வேண்டும்.

ஐயனைக் காண ஒரு மண்டலம் நோன்பு இருக்க வேண்டும். (41 நாட்கள்) என்பது தொன்றுதொட்டு வரும் மரபு. நோன்பு மனிதனைப் பக்குவப்படுத்துகிறது மாலை அணிந்து கொள்வது நமக்கு நாமே விரும்பி விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடே. விஞ்ஞான யுகத்திற்கு தேவையானவற்றை மெய்ஞானிகள் அன்றே கூறியிருக்கிறார்கள்.

வனங்களைக் கடந்து சந்நிதானத்தை அடையும்போது பதினெட்டு படிகள் தாண்டியே செல்ல வேண்டும் பதினெட்டுப் படிகளுக்கும் தத்துவம் புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் இவற்றைக் கடந்தாலே ஐயனைக் காணலாம்.

### ஏன் ஒரு மண்டலம் நோன்பு அனுஷ்டிக்க வேண்டும்?

மனிதனை ஆட்டிப்படைக்கும் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை தன் இஷ்டம் போல் அலையவிடாமல் கட்டுப்படுத்தவே ஒரு மண்டல நோன்பு. கடும் சுகவீனமுற்றவருக்கு வைத்தியர் தொடர்ந்து மருந்து கொடுத்து சுகப்படுத்துவார். அதுபோலவே இந்த நீண்ட விரதமும் அமைகிறது.

இந்த பஞ்சேந்திரியங்கள் நல்லவற்றையே செய்ய இறைவன் படைத்திருக்கிறான். ஆனால் அவை தன்னிஷ்டப்படி உண்ண வேண்டாத உணவுகளை உண்டு. மனம் பார்க்கத் தகாத காட்சிகளைப் பார்த்து, முகரத் தகாத மணங்களை முகர்ந்து, அளவிலாத சத்தங்களைக் கிரகித்து, கடும் சொற்களைப் பேசி மனதை சஞ்சலப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி ஆணவத்தால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் சொற்களையும் பிரயோகிக்கின்றன. இவை எல்லாவற்றையும் வயப்படுத்தி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐயனைக் காண வேண்டுமாயின் தேகபலம், பாதபலம் மட்டுமன்றி மனோபலத்தையும் பெறவேண்டும். தேக ஆரோக்கியத்திற்கு பிரம்மச்சர்யம் இன்றியமையாதது. மேற்கூறிய வற்றை செவ்வனே கடைப்பிடித்தால் ஐயன் பரிபூரண பலத்தையும் தந்திடுவான் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளசி மாலை எதற்காக அணிய வேண்டும்?

வீட்டில் துளசிச் செடியை பக்குவப்படுத்தி வளர்க்கிறோம். வசதி உள்ளவர்கள் வீட்டில் துளசி மாடத்தை அமைத்துப் பூஜிப்பார்கள். அதற்கு ஒரு தத்துவம் உண்டு.

எம்மை ஈன்றெடுத்தவள் தாய். துளசி என்பது மஹாலட்சுமியின் மறுவடிவமே. துளசித்தாய் இருக்குமிடத்து நாராயணன் முதல் சகல தேவர்களும் குடிகொண்டிருப்பார்கள். தீட்டு துடக்குகள் விலக்கப்பட்டுள்ளது. எனவே ஐயப்பன்மார்கள் இத்துளசி மாலையை அணிவதே சாலச் சிறந்தது. அதுமட்டுமன்றி துளசி நீரை தினம் அருந்தி வந்தால் உடல் பிணிகள் நீங்கி சுகமடைவோம். துளசி மாலையை அணிந்தவுடன் எம்மை அறியாமலேயே ஒரு புத்துணர்ச்சிப் பெறுவோம். அதுமட்டுமன்றி காட்டு மிருகங்களிலிருந்தும் கொடிய விஷ ஜந்துக்களிடமிருந்தும் காப்பாற்றப்படுகிறோம் என்பதையும் மறக்கலாகாது. துளசித் தாயானவள் துணையிருக்கும்போது மனக் கலக்கம் எதற்கு?

## ஏன் புலால் உண்ணக் கூடாது?

புனிதத் தாயின் மாலை கழுத்தில் இருக்கிறது. வருடத்தில் 300 நாட்கள் நாம் விரும்பியதை செய்கிறோம். மிகுதி 65 நாட்களே! அடுத்து வரும் 300 நாட்களை எப்படி வாழப்போகிறோம் என்பதன் பரீட்சையே விரதம்.

தாவர போசனம் சாத்வீக உணவு. புலால் காம உணர்ச்சியைத் தூண்டக் கூடியது. இத்துடன் வெங்காயம், பூடு, காரம் என்பவற்றையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் ஏனெனில் இந்திரியங்களின் சேஷ்டையினால் விரத பங்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே புலால் உண்பது ஐயப்ப விரதத்தில் முக்கியமாக கடைப்பிடிக்கப்படும் பிரம்மச்சர்ய விரதத்திற்கு ஊறு விளைவிக்கும். ஆதலால் புலால் உணவை தவிர்க்க வேண்டியது ஐயப்பமார்களின் கடமைகளில் ஒன்றாகும்.

## இருவேளை எதற்காக நீராட வேண்டும்?

காலையில் சூரிய உதயத்திற்கு முன்பும் மாலையில் சூரிய அஸ்தமனத்திற்கு பின்பும் நீராடுவது சாலச்சிறந்தது. உடலில் உள்ள உஷ்ணம் கட்டுப்படுத்தப்படுகிறது. தேகம் பக்குவப்படுகிறது. மார்கழி மாதத்தில் பனியும் குளிரும் காட்டில் சற்று அதிகமாகவே இருக்கும். எனவே இருவேளை நீராடிப் பழகிக் கொண்டால் எக்குளிரையும் எம்மால் தாங்கிக் கொள்ள முடியும்.

## ஏன் கறுப்பு ஆடை அணிய வேண்டும்?

கறுப்பு ஆடை மங்களகரமற்றது என்றும், துக்க காரியங்களுக்கும் சிலர் அணிகின்றனர் என சிலர் அவலட்சணமாக கருதுகின்றனர். ஐயப்பனுக்கு உகந்தது கறுப்பு நிறமே! கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் கறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையணிந்த ஐயப்பமார்கள் பளிச்சென்று தெரிவதில்லை. இருள் சூழ்ந்த வேளையில் நாமும் இருளாகவே இருப்போம். அடுத்ததாக கறுப்பு நிற ஆடை அணிந்தவர்கள் ஐயப்பமார்கள் என்று வீட்டுக்கு விலக்கான பெண்கள் தாமாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்.

### ஏன் படுக்கை தலையணையை நீக்கி சிறு துண்டை மட்டுமே தரையில் விரித்து துயில வேண்டும்?

மலைக்கு இவற்றைக் கொண்டு செல்ல முடியாது. அத்துடன் தலையணையும், படுக்கையில் சிந்தனையை திசைதிருப்பி மனக்கிலேசம் ஏற்பட்டு விரதபங்கம் ஏற்பட வாய்பபுண்டு நம் முன்னோர்கள் படுக்கையிலா உறங்கினார்கள்?

### பாதணி ஏன் அணியக் கூடாது?

காடு மலைகளைக் கடக்கும்போது பாதணி நல்ல பலனைக் கொடுக்காது. சில வேளைகளில் சறுக்கவும் வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி ஐயப்ப பக்தர்களுக்கு ஒரே நியதி. ஏழை - பணக்காரன், உயர்ந்தோர் - தாழ்ந்தோர், பெரியோர் - சிறியோர் என்பவை ஐயன் சன்னிதியில் கிடையாது.

ஆம், கலியுக வரதன் அவதரித்து நமது கவலை, கஷ்டங்களை நீக்கி கருணை வடிவமாக சபரிமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப சுவாமியை தரிசிக்க கடுமையான விரதமிருந்து, இருமுடிதாங்கி காடு மலைகளையெல்லாம் கடந்து தரிசன வேற்கையை தவிர வேறு எதுவுமின்றி, நாவிற்கினிய சரணங்களை முழங்கி அவன் திருவடியை சரணடைவோரை தெய்வமாக்கவல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹத்துவம் இன்றியமையாததாகும்

**மனிதனை தெய்வமாக்கும் சுவாமியே சரணம் ஐயப்பா!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் புராண வரலாறு

### கேரளத் தோற்றம்

அழகு கொஞ்சும் கேரளத்தை உருவாக்கிய பரசுராமர் பல்வேறு இடங்களில் இருந்தும் பிராமணர்களை அங்கு குடியேற்றினார். பின்னர் பதினெட்டு மலைகளில் தர்ம சாஸ்தாவின் திருக்கோயில்களையும், பதினெட்டு கடலோரப் பகுதிகளில் ஸ்ரீதேவியின் அருட் கோயில்களையும் அமைத்தார். அந்தப் பதினெட்டு மலைக்கோயில்களுள் சபரிமலை சாஸ்தா கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எரிமேலி தர்ம சாஸ்தா கோயில் அச்சன் கோயில், ஆரியங்காவு, குளத்துப்புழை, சபரிமலை முதலிய அந்தப் பதினெட்டுள் சிலவாகும். ஏனையன எங்கு அமைக்கப் பெற்றன என்பது இதுவரை சரியாக அறியப்பெறவில்லை. நாம் அறியக்கிடைத்து, அருளைக் குவிக்கும் சபரிமலை சாஸ்தாவின் அருமை பெருமைகளைத் தெளிவாக இங்கு அறிந்து அருள் பெறுவோம்.

### புராண வரலாறு

துர்க்கையால் கொல்லப்பட்ட மகிஷாசுரனின் தங்கை மகிஷி என்னும் அரக்கி தன் அண்ணனின் மரணத்தால் கோபமுற்று, தேவர்களைப் பழிக்குப்பழி வாங்க எண்ணி, பிரம்மனைத் தவம் இயற்றி வரம் பெற்றாள். ஹரிஹரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்னும் வரம்பெற்று, மகிஷி தேவர்களைக் கொடுமைப்படுத்தினாள். இவளிடமிருந்து தப்பித்து நிலைத்து வாழ எண்ணி அமுதுண்ண விரும்பி தேவர்களும், பிற அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து இறுதியாக அமுது பெற்றனர். ஆனால், அமுதினைத் தேவர்களிடமிருந்து அசுரர்கள் பறித்துப் பெற்று உண்ணத் தொடங்கினர்.

தேவர்களின் வேண்டுதலுக்கிணங்கிய திருமால் அழகிய கன்னி (மோகினி அவதாரம்) உருக்கொண்டு அசுரர்களை மயக்கி, ஏமாற்றி அமுதினை வாங்கித் தேவர்கள் அனைவருக்கும் பரிமாறினார். பின்னர், இந்தக் கன்னி உருக்கொண்ட திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த திருக்குழந்தைக்கு தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். தர்ம சாஸ்தாவின் தோற்றம் சிவ வைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அருவ உருவமாய் காலத்திற்கும் குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரியகாரணங்களுக்காக அரிகரனார் ஐக்கியம் ஏற்பட்டது என்பது ஞானிகள் கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆராய்ச்சியின் முடிவு

நெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் வழிபட்டு வந்த திராவிடப் பரதேவதைகளான மாசாத்தான், கண்டன்சாத்தா, சாத்தப்பன் முதலியவை சாஸ்தாவையே குறிப்பன. இந்தத்தேவதைகளின் வழிபாடு ஆரியப் பிராமணர்களின் சைவ வைணவக் கொள்கைகளாலும் கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதல் பரவிய புத்தமதக் கோட்பாடுகளாலும் தழுவப் பெற்று மாற்றியமைக்கப் பெற்றன. புத்தமதத்திற்கே உரியதான சரணம் போடும் முறையும் (புத்தம் சரணம் கச்சாமி) கூட்டம் கூட்டமாக யாத்திரை செல்லுதலும் பகவான் பகவதி சரணம் விளித்தலும் புத்த மதத்திலிருந்து தழுவிக்கொள்ளப்பெற்ற வழங்கக்கங்களாகும்.

### சாஸ்தாவின் பல தோற்றங்கள்

குளத்துப்புழையில் கொஞ்சும் பாலகனாக ஆரியங்காவில் இல்லறம் பூண்டு ஆண்டுதோறும் திருக்கல்யாணக் காட்சி தரும் சாஸ்தாவாக, அச்சன்கோயிலில் பூர்ணாவும், புஷ்கலாவும் சேவைபுரிய தியானத்திலிருக்கும் வானப்பிரஸ்த சாஸ்தாவாக, எரிமேலியில் வில் அம்பு கொண்டு வேட்டைப் பிரியனாக, சபரிமலையில் துறக்கோலம் பூண்டு ஞான முத்திரை காட்டி பத்மாசனத்தில் அமர்ந்து யோக நிஷ்டையிலிருக்கும் ஐயனாக, காந்தமலையில் மகர நாளன்று மட்டும் ஜோதி சொரூபனாகவும் திருக்காட்சி தந்து அருள்பொழிகிறார். ஹரிஹர சுதனான தர்மசாஸ்தா, சாஸ்தாவுக்கு பூர்ணை புஷ்கலை என்று இரு மனைவிமார்களும் சத்யகன் என்ற ஒரு புத்திரனும் உண்டு. எனப் புராணம் கூறுகிறது. சபரிக்கோயில் 1950ல் தீயோர் சிலரால் தீயிடப்பட்டது. மீண்டும் பக்தர்கள் பலரால் மிகப் பொலிவுடன் நிர்மாணிக்கப் பெற்றது.

## ஐயப்பன் பூவுலகில் அவதரித்த வரலாறு

## சாஸ்தாவின் அவதாரம் தோன்றிய காலம்

கேரளத்தின் சேரப் பேரரசு வீழ்ந்து, சிற்றரசர்கள் ஆட்சியில் பாண்டி தேசக் கொள்ளையர்கள் சபரிக் கோயிலைக் கொள்ளையடித்து, சாஸ்தாவின் மூல விக்கிரகத்தை நாசப்படுத்திப் பூசாரியை கொலை செய்தனர் கொள்ளையர் தலைவன் உதயன் என்பான். பந்தளம் அரண்மனையிலிருந்த அரசகுமாரியை கடத்திச் சென்று, தன் பாளையத்தில் சிறை வைத்தான். பூசாரியின் மகன் ஜயந்தன் (சேனன்) மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்க வேண்டி, பொன்னம்பல மேட்டில் தவம் செய்தான். அவன் கனவில் சாஸ்தா தோன்றி "நீ உதயன் பாளையத்திலிருந்து அரசகுமாரியை மீட்டு வந்து, அவளை மணம் புரிந்து கொள்வாயாக! உங்களிருவருக்கும் பிறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை மீண்டும் சாஸ்தவை நிர்மாணிக்கும்" எனக்கூறவே அதுபோல் அரசகுமாரியை ஜயந்தன் மீட்டு வந்து மணம் புரிந்தார். மார்கழித்திங்கள் சனிக்கிழமை உத்தர நட்சத்திரமும் பஞ்சமி திதி விருட்சிக லக்கினம் கூடிய நன்னாளில் அழகுமிகு ஆண்மகவு பிறந்தது. "அக்குழந்தை சாஸ்தாவின் அவதாரமே" என அசரீரி ஒலித்தது. சபரியில் பரசுராமர் பிரதிஷ்டை செய்தது தர்மசாஸ்தா. சாஸ்தாவின் அவதாரம் ஐயப்பன் அவதாரம் தானே தவிர ஐயப்பன் சாஸ்தவினின்றும் வேறுபட்டவர் அல்லர்.

### அவதாரத்தின் நோக்கம்

உதயன் முதலிய துஷ்டர்களை ஒழித்து அவனால் சீர்குலைக்ப் பெற்ற சபரிக் கோயிலைச் சீர்திருத்தி சாஸ்தாவை நிர்மாணித்தல்.

சாதி சமய வேறுபாடின்றி, ஏழை செல்வர் பேதமின்றி, காமக்குரோதங்களை நீக்கி, பிரம்ம தத்துவத்தைச் செலாக்கி, சமயக் கொள்கைகளைப் பின்பற்றும் தீர்த்த யாத்திரையாக்கி சாஸ்தாவின் வழிபாட்டில் ஆர்வம் ஏற்படுத்தப் போதனையளித்தல்.

### பந்தள மன்னன், பாலகனை பம்பை நதிக்கரையில் கண்டெடுத்தல்

ஜயந்தனிடம் சீரும் சிறப்புமாக ஐயப்பன் வளர்ந்து வருங்கால், ஒரு நாள் ராஜசேகரன் எனும் பந்தளமன்னன், பம்பா நதியோரம் வேட்டையாட வந்தான். குழந்தைப் பேறில்லாத மன்னன், வனத்தினிடையே குழந்தை அழும் ஒலி கேட்டுத் திடுகிட்டு, ஜயந்தனின் பர்ணசாலையை அடைந்து, தொட்டிலில் கிடந்த குழந்தையைத் தூக்கி, வாரித்தழுவிக் கொண்டான். குழந்தையும் மன்னனை மிகுந்த பாசத்துடன் கட்டித்தழுவிப் பிரிய மறுத்தது. ஜயந்தனும் அவதார நோக்கத்தை நிறைவேற்ற மன்னனிடம் வளர்வதே இறையருள் தன் யோக ஞானத்தால் உணர்ந்து, மன்னனிடம் குழந்தையை கொடுத்தருளினார். மன்னனும் மகிழ்ந்து ஏற்று நாடு திரும்பினார்.

### ஐயப்பன் புகழ் பரவுதலும் வன யாத்திரை செல்லலும்

ஐயப்பன் கல்வி, வேதம், போர்முறை முதலிய சகல கலைகளையும் தெளிவாகக் கற்றார். குருதட்சணையாகக் குருநாதர் மகனின் குருடு, ஊமைத்தன்மைகளை நீக்கினார். இவ்வாறு ஐயப்பனின் புகழ் அதிகமாகி வரும்பொழுது, ராணிக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. மன்னன் ஐயப்பனுக்கு முடிசூட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தான். மந்திரி நாட்டை தான் ஆளச் சதி செய்து மணிகண்டனை அழிக்கத் திட்டமிட்டான். "வேட்டுவன் நாடாள்வதா?" எனப் பிரசாரம் செய்தான். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனற்றுப்போகவே, செய்வினைகளால் மணிகண்டன் உடம்பு புண்ணாகச் செய்தான். பரமசிவன் துறவியாக வந்து குணப்படுத்தினான். பின்னர் தன்மகன் பிறந்தநாள் விழாவிற்கு மணிகண்டனை அழைத்து அமைச்சர் விஷம் கொடுத்தான் அதனை மணிகண்டன் கருட பஞ்சாக்ஷரம் ஜபித்து வென்றார்.

பின்பு அமைச்சர் ராணியின் நலல் உள்ளத்தை குழப்பி, அவள்மகன் ராஜேந்திரனுக்குத்தான் பட்டம் சூட்டவேண்டும் என வாதாடினான். அவன் சதிக்கு உடந்தையாக ராணியும் தீராத தலைவலி என நடித்தாள். அமைச்சரினால் ஏவப்பட்ட வைத்தியர், புலிப்பாலினால் செய்யப்படும் மருந்தினாற்தான் ராணியின் தலைவலி தீரும் என்றார். தாயின் தலைவலியைத் தீர்க்கப் புலிபால் கொண்டுவர ஐயப்பன் புறப்பட்டார். மிகுந்த கவலைக்குப் பின் மன்னன் ஐயப்பனை வழியனுப்பி, உணவு கட்டி எடுத்துச் செல்லும்படியும் முக்கண்ணனாகிய சிவனை நினைத்துக்கொள்ள, முக்கண்ணுடைய தேங்காயை உடன் எடுத்துச் செல்லும்படியும் பணித்தார். மன்னன் தந்த பொருட்களை ஐயப்பன் "இருமுடிக்" கட்டாக அமைத்து, வில்லும் அம்பும் ஏந்திப் புறப்பட்டார். அமைச்சர் மகிழ்ந்தான். மன்னர் மனக்கவலையைப் பரமசிவன் பொறுப்பில் விட்டு

## ஐயப்பன் புலிக்கூட்டத்துடன் பந்தள நாடு திரும்பியமை

ஐயப்பன், காட்டுவழியில் பொன்னம்பல மேட்டில் தவமியற்றி வந்த தாய் தந்தையரைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் புலிக்கூட்டம் ஒன்றைத் திரட்டிக்கொண்டு, புலியின்மீது அமர்ந்து புலிப்பாலுக்காகத் தாய்ப் புலியுடன் மற்ற விலங்குகளும் பின்தொடர ஐயப்பன் பந்தள நாடு திரும்பினார். இது கண்ட மக்கள், ஐயப்பனைத் தெய்வமென வியந்து வழிபட்டுப் போற்றினர். ஐயப்பன், மன்னன் அடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆனால் மன்னன் ஐயப்பனைத் தெய்வம் என உணர்ந்து வணங்கி, தந்தை மகன் என்ற உறவில் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டார். புலிக்கூட்டத்தை திருப்பி அனுப்பி, மக்கள் அச்சம் போக்க வேண்டினார். அதன்படி ஐயப்பன் ஆணையிட விலங்குகள் வனம் திரும்பின. அமைச்சர் தன் தவறு உணர்ந்து ஐயப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். தாயும் தான் செய்த தவறுக்காக வருந்தினார். ஐயப்பன் ஆறுதல் கூறினார். ஐயப்பனிடம் அரசரும், குருவும் மக்களும் உபதேசம் கேட்டனர். இதனாலேயே ஐயப்பன் குருவின் குரு என அழைக்கப்படுகின்றார். சாஸ்தாவைப் பிரதிஷ்டை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்துடன் செல்வதாகவும், மீண்டும் சந்திப்பதாகவும் கூறி ஐயப்பன் பந்தளத்திலிருந்து விடைபெற்றார்.

### பாத்திமாவின் மகனான வாபரை தன் தோழராக்கியமை

ஐயபப்ன் முதலில் காயங்குளம் மன்னரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பெருந் தொல்லை கொடுத்து வந்த வாபர் என்னும் கடற்கொள்ளைக்காரன் பற்றிக் கேட்டறிந்தார். வாபர், இஸ்மாயில் கோத்திரத்தில் பர்ஹவியா வகுப்பில், ஹலேப் எனும் ராஜ்யத்தில் பாத்திமாவின் மகனாக பிறந்த ஒரு அரேபிய முஸ்லீம் ஆவார். வாபர் இந்திர மந்திர ஜாலங்களால் பல பெரும் வீரர்களை வென்று அடிமைகளாகச் சேர்த்துக்கொண்டார். தொழில் கப்பல் ஓட்டுவதும், உப்பு வியாபாரமுமே ஆனால் கொள்ளையடிப்பதில் கிடைக்கும் பெரும் பொருளை, ஏழைகளுக்கு வாரி வழங்கினார். வாபரின் ஆற்றலையும் நல்லுள்ளத்தையும் அறிந்த ஐயப்பன் அவரை வென்று நண்பராக்கிக் கொள்ள முடிவு செய்தார். கருநாகப்பள்ளிக் கடற்கரையில் வபரை எதிர்த்துப் பெரும் போர் நடத்தி ஐயப்பன் வென்றார். வாபர் ஐயப்பனின் திறமையையும் பெருமையையும் உணர்ந்து அடி பணிந்தார். வாபரை இனிய சொல்பேசி, ஆறுதல் கூறி, நல்வழி காட்டி நண்பராக்கிக் கொண்டார் ஐயப்பன். தர்மசாஸ்தா சிலையை நிர்மாணிக்கும் பணியில் வாபரும், அவர் படைகளும் ஐயப்பனுடன் சேர்ந்து பணியாற்ற முடிவு செய்தனர். அதற்காக வாபர், முஸ்லீம் மதத்தைவிட்டு இந்து மதத்தில் சேர்ந்து விடுவதாக கூறினார். அதற்கு ஐயப்பன் "உலகிற்கு பணியாற்ற மதம் எதுவாயினும் கவலையில்லை. மதம் மாற வேண்டாம்" என்று கூறித் தெளிவாக்கினார். பின்னர் ஒரு முறை, பந்தளத்தை தாக்கிய உதயனை ஐயப்பனும், வாபரும் எதிர்த்தப் போரிட்டு, பின்வாங்கி ஓடச் செய்தனர். ஐயப்பனின் வீரத்தை புகழ்ந்து பந்தள மன்னன் ஐயனின் இருகைகளுக்கும் "வீரச்சீருங்கலை" எனும் பொற்சங்கிலி வழங்கிக் கௌரவித்தான். ஐயப்பன் வாபரை சேனநாயராக்கி, படைகளுடன் எரிமேலியில் தங்கி, மேற்கு தேசங்களிலிருந்து சபரிமலைக்கு வரும் படைகளுக்குத் துணையாக இருக்கும்படி செய்தார்.

### ஈழவர் குடும்பத்தலைவனான சீரப்பன் மகளை முக்தி பெற வைத்தமை.

ஐயப்பன் அம்பலப்புழை, செம்பகேசரி, சேர்த்தலை, பெரும்பாவூர், பரப்பனாடு, சால்குடி முதலிய இடங்களுக்குச் சென்று சிறுசிறு உட்பூசல்கள் ஒழித்து, உதயனை எதிர்த்துப் போரிட பெரும்படை திரட்டி, போர்ப் பயிற்சிகள் அளித்துப் படைக்கு குழுக்களை ஏற்படுத்தினார். பந்தளம், அம்பலப்புழை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலங்காடு ஆகிய மூவிடங்களிலும் தலைமைச் சங்கங்கள் அமைத்து, மற்ற இடங்களை இவற்றின் கிளைகளாக முறைப்படுத்தினார். சேர்த்தலை தண்ணீர் முகத்தில் ஈழவக் குடும்பத் தலைவனான சீரப்பன் சிறமூப்பனுடன் தங்கிப்படைகளுக்கு ஆயுதப் போர் கற்பிக்கும் காலத்தில் சீரப்பன் மகள் ஐயப்பன் பால் காதல் கொண்டாள். நித்தியப் பிரமச்சாரியான ஐயப்பன் அவளுக்கு ஞானோபதேசம் செய்து மனதை தெளிவித்தார். பந்தள மன்னனிடமிருந்து பெற்ற இரு பொற் சங்கிலிகளையும் அவளுக்கு கொடுக்கவே, அவளுடைய உலகாசைகள் விட்டொழிந்தன. இறுதியில் சபரியில் சென்று முக்தி பெற்றாள். சில காலத்திற்குப் பின்னர், இந்தச் சங்கிலிகளின் மகிமையை அறிந்து பந்தள மன்னன் ஒருவன், ஏராளமாகப் பொருள் கொடுத்துச் சீரப்பன் குடும்பத்திலிருந்து அவற்றை விலைக்கு வாங்கி விட்டான் என்று கூறப்படுகின்றது. இன்றும் சபரிமலை வழிபாட்டில் வெடிவைக்கும் உரிமை சீரப்பன் பரம்பரைக்கு கொடுக்கபட்டு வருகிறது.

## ஐயப்பன் பாண்டி நாட்டுக்கு விஜயம்

ஐயப்பன் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரைக்கு வந்து, மன்னனைக் கண்டு ஞானோபதேசம் செய்து ஒரு குறிப்பிட்ட நாளில் சபரிக்கு வரும்படி அழைத்தார். எரிமேலியில் வாபரைச் சந்தித்து அடுத்துவரும் மகர சங்கிராந்தியன்று சாஸ்தா பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் கூறித்திட்டங்களை விளக்கி முன்பே மலைக்கு அனுப்பிப் படைகள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்வித்தார். பின்னர் பொன்னம்பலம் மேட்டில் தவம் செய்து வந்த பெற்றோர்களைக் கண்டு சாஸ்தா பிரதிஷ்டையைத் தன் தந்தையாகிய ஐயந்தன் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ஐயந்தனும் அதனைப் பெரும்பேறாகக் கருதிக் கொண்டான்.

## இருமுடி கட்டலும் பேட்டை துள்ளலும்

ஐயப்பன் புலிப்பாலுக்காகச் சென்றபோது கொண்டு சென்றதைப்போலப் படையினரும் பக்தர்களும் இருமுடிகட்டு ஏந்திச் சென்றனர். ஆன்மீக உணர்ச்சியில் பக்தர்களும் படைகளுடன் கிளம்பினர். மகர ஜோதிக்கு 41 நாள் முன்பிருந்தே பூரண பிரம்மச்சரிய விரதம் ஏற்றுப் பஜனைகள் செய்து புறப்பட்டனர். பயிற்சி பெற்ற பெரியோர்கள் குருமார்களாகப் பணியேற்றனர். சரணம் விளித்துப்படை கிளம்பினர். இன்றும் வேட்டையாடும் போது அம்பலப்புழை பக்தர்களுக்கு கருடதரிசனம் தவறாமல் கிடைக்கிறது. அம்பலப்புழை ஆலங்காட்டுச் சங்கங்களிலிருந்து புறப்பட்ட படையினர் ஆர்வத்தை ஐயப்பன் பாராட்டினார். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு இன்றும் பம்பையில் விருந்தும், சந்நிதியில் "விரி" (விடுதி) உரிமைகளும் தரப்படுவதே இதற்குச் சான்றாகும். பல மலைகளையும் வனங்களையும் கடந்து எல்லோரும் மகரச் சங்கிராந்திக்குப் பத்து நாட்கள் முன்னரே எரிமேலி வந்தடைந்தனர். பேட்டை துள்ளல் எனும் விழா நடத்தினர். முதலில் எரிமேலி கடை வீதிக்குச் சென்றனர். ஐயப்பன் ஆணைப்படி ஆயுதங்கள், காய்கறிகள் வாங்கினர். பெரிய ஆர்ப்பாட்டத்துடன் பெரிய கம்பளியில் கட்டித்தூக்கிச் சென்றனர். அரசனும் ஆண்டியும் வேற்றுமை இல்லாமல் கறுப்பு வேட்டி இடுப்பில் கட்டி, தலையில் கம்பளி சுற்றி, கரி, குங்குமங்களை உடம்பில் பூசிக் காட்டு இனத்தார் போல வேடமிட்டு "ஐயப்ப திந்தகத்தோம், சுவாமி திந்தகத்தோம்" எனக் கோஷம் போட்டு வாத்தியங்கள் முழங்க வாபர் வணங்கும் இஸ்லாம் மத ஆலயத்தை வலம் வந்து, பின் சாஸ்தா கோயிலை வலம் வந்து ஆனந்தக் கூத்தாடினர். பின்னர் சபரிமலை நோக்கிப் புறப்பட்டனர். எரிமேலியைத் தாண்டியதும் பெரிய காடு தொடர்ந்தது. இதனை சாஸ்தாவின் நந்தவனம் என ஐயப்பன் போதித்தார். இலை கிள்ளிப் போட்டு வனதேவதையையும் கானகத்தையும் வணங்குமாறும், வன விலங்குகளைத் துன்புறுத்தக்கூடாது என்றும் போதித்தார். எரிமேலிக்கு இரண்டு மைல் கிழக்கேயுள்ள சாந்தி தருகின்ற பேரூர்த்தோட்டில் ஓய்வு எடுத்தனர்.

## காளைகட்டியும் அழுதையாறும்

சபரிமலைக்கும் எரிமலைக்கும் இடையில் பல மலைகளின் உச்சியில் உதயன் தாவளவங்கள் (இருப்பிடம்) நிறுவியிருந்தான். முதலில் இஞ்சிப்பாறைக் கோட்டையைக் கைப்பற்ற அதனைக் காத்துவந்த புதுச்சேரி முண்டன் எனும் கொள்ளைக்காரத் தலைவனுடன் போரிட முடிவு செய்தனர். கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைத் தாண்டிச் செங்குத்தான அழுதை மலை உச்சியில் அமைந்திருந்த கோட்டையினைத் தாக்கும் முறையினை ஐயப்பன் காளை கட்டி எனும் இடத்தில் படையினருக்குக் கற்பித்தார். தன் பயணத்திற்கு வைத்திருந்த காளையைக் கட்டியதால் இவ்விடம் "காளை கட்டி" என அழைக்கப்படுகிறது. இங்கு ஐயப்பன் ஓய்வெடுப்பதற்காக அமர்ந்த கல்லை இன்றும் தொட்டு வழிபட்டு வருகின்றனர்.

காளை கட்டியிலிருந்து கிழக்கே ஒன்றரை மைலில் அழுதையாறு ஓடுகிறது. இது பம்பையில் சேரும் சிற்றாறு. இதன் கரையில் படைகள் தங்கி தாளமேளம் போட்டுப் பஜனை முடித்து இரவு தங்கினர். இஞ்சிப்பாறையில் போர் நடக்கும்போது உதயனின் தலைப்பாறைப் படைகள் உதவிக்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமலிருக்க ஒரே சமயத்தில் தலைப்பாறை கோட்டையையும் முறியடிக்க ஐயப்பன் திட்டமிட்டார். பந்தளம் படையைச் சேர்ந்த சின்னக் கடுத்தை (கொச்சிக் கடுத்தை) ராமன், கிருஷ்ணன் ஆகியோர் பொறுப்பில் ஒரு படையினைத் தலைப்பாறையைத் தாக்க ஆணையிட்டார். ஐயப்பன் ஆணைப்படி அகழியைத் தாண்ட வீரர்கள் அழுதையாற்றில் குளித்துவிட்டு பெருங்கற்களையும் மரக்கிளைகளையும் அகழியில் போட்டு பாலம் போல் அமைத்துப் படையினர் சரணம் போட்டுக் கொண்டு கோட்டைக்குள் புகுந்தனர். பல வித்தைகள் காட்டியும் பயனில்லாமல் புதுச்சேரி முண்டன் கோட்டை வாசலை திறந்து ஓட்டம் பிடித்தான். அவன் தப்பியோடிக், கரிமலைக் கோட்டையை நோக்கி சென்றான். உதயனுக்கு உதவி புரிய விடக்கூடாது என ஐயப்பன் ஆணையிட்டிருந்ததால், வாபர் முண்டனை வெட்டி வீழ்த்தினார். இதனால் அந்த இடத்தில் ஓடுகின்ற நதிக்கு புதுச்சேரி ஆறு எனப்பெயர் வழங்கி வருகிறது. பின்னர் படை தொடர்ந்து கரியிலந்தோடு அடைந்து இரவு தங்கியது.

## கரியிலந்தோட்டிலும் கரிமலையிலம் கடும் போர்

தலைப்பாறைக் கோட்டையின் மேலிருந்து பந்தள வீரர்களை தாக்கும் எதிரிகளை வில்லாளி வீரனாகிய ராமன் அம்புமாரி பொழிந்து அழித்தான். சிறந்த மல்யுத்த வீரனாகிய கிருஷ்ணன் எதிரிகளைப் பிடித்து அப்பளமாக நொறுக்கி தவிடு பொடியாக்கினான். "ஆனைச் சடக்கம்" எனும் மல்யுத்த முறையதால் கோட்டையின் கோபுர வாசலை அழித்தான். எதிர்க்க இயலாத கொள்ளைக்காரர்கள் தப்பியோடினர். கிருஷ்ணனுக்கு "தலைப்பாறை மல்லன்" என்று பெயர்கள் வழங்கப்பட்டன. போர் நடந்த இரு இடங்களிலும் ஒரே சமயத்தில் ஐயப்பன் காட்சியளித்து உபதேசம் கூறி உற்சாகம் ஊட்டியதாகக் கூறப்படுகின்றது. சில சமயம் குதிரை மீதும், சிலசமயம் யானை மீதும், பல இடங்களில் பல விதங்களில் ஐயப்பனைப் பார்த்தாக வீரர்கள் கூறினர். சாரதியைப் போல் ஐயப்பன் போர் நடத்தினாரே தவிர போர் புரிந்தார் இல்லை.

பொழுது விடிந்ததும் படைகள் கரிமலையைச் சுற்றி வளைத்தன. உதயன் திகைத்தான். எனினும் மனம் தளராமல் போர் புரிந்தான். ஐயப்பன் படைகள் "சரணம் ஐயப்பா, சரணம் ஐயப்பா" என்று குரல் எழுப்பிக்கொண்டு கரிமலைக் கோட்டைக்கு வெளியில் நின்ற மரங்களை வெட்டிக்கோட்டை மீது சாய்த்தனர். மரங்கள் மீது ஏறிக்கோட்டை வாயிலைத் திறந்து படை நுழைந்தது. சின்னக் கடுத்தை உதயனை எதிர்த்து போரிட்டு வாளால் வெட்டி வீழ்த்தினார். மாலைப் பொழுதிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் மலை உச்சியில் ஐயப்பன் கொடி பறந்தது. அமைதி நிலவியது

## இராம பிரான் பாததூளி ஏற்ற, புண்ணியம் பெற்ற புனித பம்பைநதிக் கரையில் படையினர்

மாலை வேளையில் கரிமலை இறங்கிப் பம்பா நதிக்கரை வந்தனர். இரவில் ஓய்வுக்கு முன் ஐயப்பன் எல்லோருக்கும் நன்றி செலுத்தினார். வெற்றிச் செருக்குறாமல் இருக்கும்படி வேண்டினார். பம்பைக்கரையில் இருந்த மாதங்க முனிவருக்கும் அவர் சீடர்களுக்கும் தொண்டாற்றி இறுதியில் இராமபிரான் அருள் பெற்றுச் சபரியில் முக்தியடைந்த வேடுவப் பெண்ணான "சபரி" வாழ்ந்ததும் இந்நதிக்கரையில்தான் மறுநாள் காலை பம்பையில் நீராடி பித்ருகளுக்கும் சிரார்த்தம் ஊட்டிய பின் உணவருந்தினார். மதியச் சாப்பாடு சிறந்த விரு ந்தாக அமைந்தது. சிலர் விறகு பொறுக்கச் சென்றனர். சிலர் தீபக்காட்சி ஏற்பாடு செய்தனர். ரதம் போல் சப்பரங்கள் செய்து அதனுள் தீபம் ஏற்றினர். ஐயப்பன் எல்லோருடனும் எல்லா வேளைகளிலும் கலந்து கொண்டார். அப்பளமும் பழங்களும் கட்டி உயரமான மரக்கிளையில் தொங்கவிட்டு வனதேவதைகளுக்கு நைவேத்தியம் படைக்க செய்தார். பெரும் விருந்து மிகச் சிறப்பாக நடந்தது. வன தேவதைகளும், சித்தர்களும் மாறுவேடம் பூண்டு வருவர் என ஏழைகளுக்கும் உணவளிக்கச் செய்தார். இதுபோல் இன்றும் இதைப் பக்தர்கள் "சக்தி பூஜை" எனக் கொண்டாடி நடத்துகின்றனர் பம்பையின் மணல்திட்டில் நெருப்பை மூட்டி வலம் வந்தனர் பம்பையின் தீப ஒளி இன்றும் கண் கொள்ளாக் காட்சியாக மனதை கவருகின்றது.

இரவு பம்பையில் தங்கினர் மறுநாள் காலை சபரி நோக்கிப் புறப்பட்னர். நீலிமலை ஏற்றம் தொடங்கியது. புஷ்ப அர்ச்சனை செய்து மலையை வழிபட்டு மலையேறினர். இன்றும் பச்சிலை கிள்ளிப்போட்டு நீலிமலை ஏறுவது வழக்கமாக இருந்து வருகின்றது. நீலிமலை ஏற்றம் மற்றமலைகளை விடக் கடினமாக இருந்தது. என்றாலும் தர்மசாஸ்தாவின் அருள் சன்னிதி நெருங்கி விட்டதால், பரவச மிகுந்த ஆர்வத்துடன் தொடர்ந்தனர். வழியில் இராம பக்தையான "சபரி" முக்தி பெற்ற சபரி பீடத்தை ஐயப்பன் ஆணைப்படி வழிபட்டனர். ஐயப்பன் படைகளுக்கு இனி ஆயுதங்கள் தேவையில்லாததால் அவற்றை ஆலமரத்தடியில் போடும்படி ஐயப்பன் ஆணையிடவே, அவ்வாறு செய்தனர். அதுதான் இன்றும் அந்த இடம் "சரங்குத்தி ஆல் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆலமரத்தின் அடியில் ஐயப்பன் சில உபதேசங்கள் அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் உபதேச மொழிகளாவன:

பற்றற்ற கருமம் செய்யவோமானால் மனம் மாசு பெறாது: தூய மனத்தில் ஞானம் ஒளிரும், ஞானம் வாழ்வில் இலட்சியம்: நற்கருமத்தில இடையூறாவன காமம், வெகுளி, பேராசை முதலியவற்றை அழிக்கக் கடவுள் தியானம் அவசியம். தியாகத்தில் மனம் நிலைபெறும்போது, சாந்தியும் பேரின்பமும் உண்டாகும். கடவுளிடம் சரணாகதியடைதலே பக்தியின் இறுதிமொழி "சரணம் ஐயப்பா" என்ற சரணகதி மந்திரத்தைத். தூயமனதுடன் ஓதுகிறவன் முக்தி பெறுவான். பதினெட்டுப்படி ஏறித் தரும சாஸ்தாவின் சந்நிதி எட்டியதும் கடவுள் தரிசனம் கிடைக்கிறது. இந்தப் பதினெட்டுப்படிகளும் பதினெட்டு தத்துவங்களாகும். இவையானவை: புலன் ஐந்து, பொறி ஐந்து பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காண இயலும்.

## சாஸ்தா விக்கிரகத்தில் ஐயப்பன் ஐக்கியமாதல்

பாண்டிய மன்னரும் சாஸ்தா பிரதிஷ்டைக்காக ஏற்கனவே ஐயப்பனால் அழைக்கப் பெற்றதனால் அவரும் படைகளுடன் வருகை தந்திருந்தார். பிரதிஷ்டை ஐயப்பனின் தகப்பனார் ஐயந்தன் செய்து வைக்க ஏற்பாடாகி இருந்தது. பொழுது புலர்ந்தது "உரல்குழி" தீர்த்தமாடி பக்தர்கள் தேங்காய் உடைத்து "சரணம் ஐயப்பா" என்று கூவிக்கொண்டே பதினெட்டுப்படிகளையும் ஏறிக்கடந்தனர். எல்லோரும் உச்சிக்கு எட்டியதும் பெற்றோரின் திருவடிகளில் ஐயப்பன் விழுந்து வணங்கினார். பாண்டிய மன்னனும் தந்தையாக இருந்த பந்தள மன்னனுக்கு நமஸ்காரம் செய்தார்.

முகூர்த்தம் நெருங்க நெருங்க பக்தர்கள் திரள்திரளாக கோயிலை நெருங்கினர். மிகுந்த அமைதி நிலவியது. ஒவ்வொரு கணமும் ஐயப்பனின் பொலிவு பெருகி ஐயப்பனைச் சுற்றி ஒளிவட்டம் அதிக பிரகாசமாயிற்று. எங்கிருந்தோ ஒற்றைக் கருடன் "கிருஷ்ணா" என்று கத்திக் கொண்டு பறந்தது. பிறகு ஐயப்பன் மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மனைப் பிரதிஷ்டை செய்து அம்மனின் அருள் என்றென்றும் இங்கு நிலைத்திருக்கும் என்றும், இந்தக் கோயிலுக்கும், சாஸ்தா கோவிலைப்போலவே பெருமையுண்டு என்றும் கூறினார். பின்பு எல்லோருக்கும் அருள் காட்டிப் பின்வரும் அறிவுரைகளை வழங்கினார். இனிமேல் சபரிமலை சீரும் சிறப்புமாக விளங்கும் இன்னும் ஏராளமான பக்தர்கள் ஆண்டுதோறும் தவறாமல் சபரி யாத்திரைக்கு வருவார்கள் நாம் கைக் கொண்ட முறைகளைப் பின்பற்றி ஒரு மண்டலம் (41 நாட்கள்) விரதமிருந்து புறப்பட்டு எரிமேலி காளைக்கட்டி, இஞ்சிப் பாறைக்கோட்டை, கரிமலை சபரிபீடம், சரங்குத்திஆல், பதினெட்டாம்படி இவைகளைக் கடந்து, முக்கியமான இடங்களில் நாம் செய்த சடங்குகளைத் தவறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து சாஸ்தாவின் அருள் பெறுவார்கள் பம்பா தீர்த்தமாடி, பித்ருதர்ப்பணம், குருதட்சணை, தீபக்காட்சி, நதி பூஜை முதலியன செய்து புண்ணியம் பெறுவார்.

சங்க நாதமும் வாத்தியங்களும் முழங்க சாஸ்தாவின் விக்கிரகத்தை திருக்கோவிலுக்குள் எடுத்துச் சென்று ஐயப்பனின் தந்தையான ஜயந்தன் பீடத்தின் மேல் ஏற்றி வைத்தார். உடனே திடீரென ஒரு மின்னல் ஒளி பளிச்சிட்டது. ஐயப்பன் நின்ற இடத்திலிருந்து ஒரு திவ்விய பிரமை கிளம்பி விக்கிரகத்தில் அடங்கிவிட்டதை மக்கள் உணர்ந்தனர். ஐயப்பன் மாயமாய் மறைந்துவிட்டார். சாஸ்தா விக்கிரகத்தில் ஐயப்பன் ஐக்கியமாகி விட்டார். எல்லோரும் தம்மை மறந்து "சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா" எனக் கூவிக் கைகூப்பித் தொழுதனர். சாஸ்தாவின் கோவிலை வலம் வந்தனர். படைவீரர்களும் பக்திப் பெருக்கினால் கண்ணீர் சிந்திப் பரவசமடைந்தனர். சற்று நேரத்தில் சபரிமலை முழுவதும் சாந்தி நிலவியது.

ஐயப்பனின் பெற்றோர் பொன்னம்பல மேட்டுக்குத் திரும்பி மீண்டும் தவமேற்றனர். பாண்டிய மன்னருக்குப் பந்தள மன்னர் விடைகொடுத்தார். சபரி மலைக்கோயிலின் நிர்வாகத்தை பந்தள மன்னன் ஏற்றார். கோவிலின் பாதுகாப்புக்கு வாபர் சின்னகருத்தை இராமர் கிருஷ்ணர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஒரு உத்தம பிராமணனைக் கொண்டு பூஜைகளை நடத்திய பின் கோயிலைப் பூட்டிச் சாவியைப் பெற்றுக்கொண்டு பந்தள மன்னன் நாடு திரும்பினான். மக்களும் ஊர் திரும்பினர்.

இந்த சிறப்புமிக்க ஐயப்பனின் வரலாற்றினை அறிந்து உண்மையுணர்ந்து ஐயப்பனின் புகழ்பாடும் பக்தர்களும் அன்பர்களும் ஐயப்பனின் பேரருளைப் பெற்று நல்வாழ்வு பெறுவார்களாக!.

**சாமியே சரணம் ஐயப்பா!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியே சரணம் ஐயப்பா

# முக்கிய விரத முறைகள்

01. அன்றாட உலக வாழ்விலிருந்து சிலகாலம் விலகி நின்று ஆன்ம விசாரணை செய்து போகும் யாத்திரையே சபரிமலை யாத்திரை.

02. வயது வரம்பின்றி ஆண்களும், பெண்களும் வயதுக்கு வரும் முன்பும், ருது முடிந்து வயதான காலத்திலும் செல்ல உகந்தது.

03. தாய், தந்தையர் உத்திரவு பெற்றும், மணமானவர்கள் அவசியம் துணைவியார் உத்தரவின் பேரிலும், வீட்டில் உள்ள பெரியோர்கள் உத்தரவின் பேரிலும் மாலை அணிதல் நல்லது. பெற்றோர்கள் இல்லாதவர்கள் அவர்கள் படம் முன்போ அல்லது அவர்களை தியானம் செய்து கொண்டு மாலை அணியவும்.

04. வசதிக்கேற்றார் போல மாலை அணியலாம். முக்கியமாக ஐயப்பனுக்கு உகந்தது துளசி, தாமரை, உத்தராட்ச மாலை, 108 மணிகள், 54 மணிகள், உறுதியாக செம்பு, வெள்ளி, தாமிரக்கம்பி, கட்டியதாகவும் எளிதில் அறுக்க கூடியதாக இருக்கக்கூடாது. நல்ல உறுதி மாலைக்கு, துணைமாலை தேவையில்லை. மாலை அணிவிப்பவர் சொல்படி கேட்கவும். டாலர் மாலைக்கு தகுந்த அளவு, எடை உள்ளதாக போட்டுக்கொள்ளலாம். மாலையை இழுக்க, அறுக்க டாலர் ஏதுவாகக்கூடாது.

05. டாலரை உரிய கருவிகொண்டு வளைத்து மாலையில் போடவும். பல்கொண்டு எச்சில் செய்து இஷ்டம் போல் டாலரை மாட்டக்கூடாது.

06. மாலையை சுற்றிப்போடாமல் இருப்பது நல்லது. நதியில் நீராடும் போது கையில் பிடித்துக்கொண்டு நீராடவும்.

07. வசதிக்கேற்ப சந்தனமாலை, உத்ராட்சம் நன்கு கட்டியது போட்டுக்கொள்ளலாம்.

08. மாலை அணியும்போது சொல்லும் மந்திரம் சமஸ்கிருதம் வாயில் நுழையும் அன்பர்கள் சொல்வது நலம். சமஸ்கிருதம் அறியாதோர் ஸ்வாமி சரணம் சொல்லி அணியவும்.

ஞானமுத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம்
வன முத்ராம் சுத்த முத்ராம் ருத்ரா முத்ராம் நாமாம்யஹம்
சாந்த முத்ராம் ஸத்ய முத்ராம் வ்ருத முத்ராம் நமாமய ஹம்
சபர்யாஸ்ரம ஸத்யேன முத்ராம் பாது ஸதாபிமே
குருதக்ஷிணயா பூர்வம் தஸ்யா நுக்ரஹ காரிணே-
சரணாகத முத்ராக்யம் த்வன் முத்ராம் தாரயாம்யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்முத்ராம் கேசரீ முத்ராம் பத்ர முத்ராம் நாமாம்யஹம் சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோ நம:

09. சபரிக்கு மாலை அணியும் முன் முக்கியமாக அந்தணர்கள் பூநூல் புதியது மாற்றிக்கொண்டு சந்தியாவந்தனம் செய்தல் நல்லது.

10. முதலில மாலை அணியும் பக்தர்களுக்கு கன்னி சாமிகள் என்று பெயர். அவர்கள் தெரிந்த, நன்கு அறிந்த, பலமலை சென்று அனுபவம் பெற்றவர்களை அண்டி விபரம் கேட்டு கார்த்திகை முதல் தேதி மாலை அவர்களோடு அணியலாம். தீட்டு மற்றும் மற்றவர்கள் ஒதுங்கி பக்தியோடு நினைக்க ஏதுவாக கலர் வஸ்திரங்கள் அவசியம் அணியவும். கறுப்பு, நீலம், காவி, சிகப்பு அவாவர்கள் இஷ்டம். சிலருக்கு கறுப்பு தெய்வமாக இருக்கும். கறுப்பு ராசி இல்லாமல் இருக்கும் அவர்கள் மாற்று உடை அணிந்து மனஉளைச்சல் இன்றி உடுத்தலாம். சீருடை போல கருப்புவேஷ்டி, கருப்பு துண்டு, நீலவேஷ்டி, நீலதுண்டு என்று இல்லாமல் நல்ல நீள, அகலம் உள்ள வேஷ்டி, நலல துண்டு நீள, அகல வேஷ்டிகள் வாங்குவது நல்லது. ஒரு செட் வாங்கினால் மாற்றி உடுத்த ஏதுவாகும். சட்டை அணிபவர்கள் தயவுசெய்து துண்டை சட்டைமேல் சுற்றிப் போட்டு கொள்வது அவ்வளவு நல்லதல்ல. அவரவர்கள் பிரியம். மேலும் தொழிலுக்கு ஏற்ப மாற்று உடைகளை அணிந்து, வழிபாடு நேரத்தில் கலர் வஸ்தரங்களை பயன்படுத்தலாம். யாத்திரை செல்லும் நேரத்தில் வஸ்திர தானம் செய்வது நல்லது கூடிய வரையில் பந்தா வேஷ்டிகள் தவிர்த்து சாதாரண உடை அணிவது யாத்திரை எளிமைக்காட்டும்.

11. பெரும்பாலும் ஆலயங்களில், குரு இல்லத்தில் வசதிக்கு ஏற்ப பாத பூஜை அல்லது சிறு வழிபாடுகளுடன் மாலை அணியலாம். மாலை அணியும் 2 நாள் முன்பே மாலை, டாலர், வஸ்திரங்களை சுத்தம் செய்து குருவிடம் தந்து வைப்பது நல்லது.

12. மாலை அணியும் அன்றே தீவிர முடிவுடன் குரு சொல்லும் நேரத்தில், நாளில் யாத்திரையை அமைத்துக் கொள்வது நலம். விடுமுறை, சந்தர்ப்பம், அறிந்து யாத்ரைக்கு நாள் தேர்ந்தெடுத்தல் நலம். எனக்கு லீவூ கிடையாது, பையனுக்கு பரீட்சை என்றெல்லாம் முன்கூட்டி யோசித்து யாத்திரை செய்யவும். விரதகாலம் அவசியம் 1 மண்டலம் இருப்பது நல்லது. ½ மண்டலம் ¾ மண்டலம் என்பதெல்லாம் தற்கால புதுபாணியாக உள்ளது. அதெல்லாம் இரண்டாம் பட்சம். அவரவர்கள் இஷ்டம் ஐயனுக்கு ஏற்பட்டது பிரம்மச்சர்ய விரதம் ஒரு மண்டலம் நோன்பு, குறைந்தது 45 நாட்கள். சுற்றுலா போல நண்பர்களை கூப்பிட்டு போவது, வாகனங்களில் இடம் உள்ளது ஈடு செய்ய ஆள் சேர்ப்பது திடீர் மாலை தவிர்த்தல் நலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. குலத்தெய்வத்திற்கு காணிக்கை முடிந்து ஐயன் நோன்பை ஆரம்பிக்கலாம் உத்தரவு கேட்டேன் என்று சொல்வ தெல்லாம் ஆகாது. இறைவனை காண தெய்வம் உத்தரவு எதற்கு? அவரவர்கள் சிந்தித்து செயல்படவும். ஒரு தடவை உத்தரவு வராது போனால் என்று ஐயனை காண்பது?

14. தினசரி இறைவனை நினைந்து சரணம் சொல்லி சாத்வீகமான சைவ உணவை உட்கொண்டும், இரவு நேரங்களில் பலகாரம் செய்வதும், இருமுறை நீராடுவதும் உசிதம். அவரவர்கள் மதக்கோட்பாட்டிற்கு உட்பட்டு நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமம் அணியவும்.

15. ஐயப்பன் என்றால் சந்தனப்பட்டை போடுதல் என்று இல்லாமல் எப்போதும் போல சிறு அளவில் சந்தனம், குங்குமம் இட்டு பக்தியைக் காட்டவும் பயன்படுத்தும் சந்தனம், குங்குமம், திருநீறு நல்லதாக இருத்தல் நலம். எப்போதும் உள்ள பக்தி, பூஜையுடன் சேர்த்தே ஐயப்ப பூஜையை செய்யலாம். (மாறாமல் ஒரே நேரத்தில் கற்பூரம், பத்தி வாங்கி பயன்படுத்தி ஆராதனை செய்தல் ஆகாது.)

16. கேளிக்கை மதுபானம் அருந்துதல், (பலர் முன்னும் புகை பிடித்தல்) லாகிரி வஸ்துகளை பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

17. கன்னி ஐயப்பன்கள் யாத்திரைக்கு முன் ஒருநாளில் வசதிக்கு ஏற்ப பாத பூஜை செய்வது நல்லது. ஐயனுக்கு மிக உகந்தது கூட்டு பஜனை கூட்டுயாத்திரை, தெரிந்த ஐயப்பன்மார்கள், மற்றும் பக்திமான்களை அழைத்து வழிபாடு, பஜனை செய்து வசதிக்கு ஏற்ப இறைவனுக்கு படைத்து யாவருக்கும் பிரசாதம் விநியோகம் செய்தல்.

18. மேலும் பஜனையில் மற்றவர்கள் பஜனை புத்தகங்கள் வாங்கி பாடுவது அடுத்தவர்கள் ஜால்ரா, கஞ்சிரா போன்றவைகளை வாங்கி திரும்ப தராமல் இருப்பதை தவிர்க்கவும். புத்தகங்கள் திரும்பத் தருவது நல்லது.

19. பஜனைக்கு செல்பவர்கள் முடிந்த பூஜை பொருட்களை வாங்கி செல்வது நல்லது. பஜனை, அடியவர்கள், சந்திக்கும்போது வெறும் கையுடன் போகாமல் பழம், பூ இவைகளுடன் செல்வது நல்லது. ஆறுகளில் குளித்துவிட்டு விபூதி, சந்தனம், குங்குமத்தை அணியவும்.

20. முக்கியமாக ஒரு ஐயப்ப பக்தர் இன்னொரு பக்தரை சந்திக்கும் போதும் பேசும்போதும் 'ஸ்வாமி சரணம்' என்று தன் கையால் வாயை மூடி மிக தாழ்மையாக குரலில் சொல்லி பின் பேச்சைத் தொடங்கவும். அருள் கூர்ந்து பக்தர்கள் அடுத்த ஸ்வாமியிடம் சாமி எத்தனை மாலை? எத்தனையாவது மலை? என்றும் கேட்காமலும் தன்னுடைய பெருமையை சொல்லிக் கொள்ளாமலும், நான் 15 மலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை சொல்லிக் கொள்ளாமலும், நான் 15 மலை, 30 மலை, 50 மலை என்று சொல்லாமல் சென்று வந்த வருடங்களை சொல்லாமல் இறைவன் அருள் இருக்கும் வரை செல்வேன் என்று சொல்வது அடக்கத்தை காட்டும்.

21. மணம் ஆகி 1 மாத 2 மாத காலங்கள் மாலை இடுவதை தவிர்க்கவும். தீவிர பக்தி துணைவியார் உறுதுணை, பிரம்மச்சரியத்துக்கு இடையூறு இல்லாத தீவிர ஆற்றல் இருந்தால் மாலை அணியலாம். பெண்பாவம் பொல்லாதது. அவர்களுடைய சுக, துக்கங்களில் பங்கு கொள்வது அவசியம். பெண்களை ஏங்கவிடுதல் அதர்மம் ஆகும்.

22. தன் குழந்தை, தாய், தந்தை, நெருங்கிய உற்றார், உறவினர் நோய்வாய்ப்பட்டு நம்பமுடியாத நிலையில் இருக்கும்போது மாலை அணிவதை தவிர்த்தல் நல்லது. பெற்றோர் வயதான நிலையில் எது எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்று தெரிந்தும் தைரியத்தடன் மாலை அணிவது ஏற்றதல்ல.

23. நெருங்கிய பங்காளி, சகோதரர்கள், தாய், தந்தை, மாலை அணிந்த போது சிவ பதவி, வைகுந்த பதவி அடைந்தால் உடன் குருவிடம் தெரிவித்து மாலை கழற்றி ஐயன் படத்தில் போட்டுவிட்டு அவர்கள் வருட திவசம் (திதி) முடிந்த பின் அடுத்த வருடம் தான் நமக்கும் பிராப்தம் மலை செல்ல என்று நினைத்து இருக்க வேண்டும் அத்துடன் விரதத்தை பூர்த்தி செய்யவும்.

24. முக்கிமான மருத்துவமனை, சினிமா, டிராமா, கேளிக்கை கூட்டங்கள் செய்வது நல்லதல்ல. மேலும் பெரும் வியாதியஸ்தர்கள் மாலை அணிந்து யாத்ரை செய்வதை தவிர்க்கவும். பெரும் வியாதியஸ்தரை கூட்டிச் செல்வதும் தவறு.

25. மனைவி கர்ப்பம் 6,7 மாதமாக இருந்தால் மலை செல்லலாம். குழந்தை பிறக்கும் நெருக்க வாட்டில் மலை ஏறுதல் தவறு. படி மலை ஏறும் போது தீட்டு வரக்கூடாது. (தெய்வாதினமாக வரும் தீட்டுக்களுக்கு பொருந்தாது) மனைவிமார்களுக்கு பிரசவ நேரத்தில் அருகில் இருந்து பார்த்துக்கொள்வது தர்மம். குழந்தை பிறந்ததும் அல்லது பிறந்து 10 நாள் ஆகி புண்யாஜனம் ஆனதும் மாலை போடுதல் நலம். அதுவும் கார்த்திகை 10 தேதிக்குள் இருக்கட்டும்.

26. மாலை அணிந்த பக்தர்கள் தெருக்களில் விற்பனை செய்யும் டீ, காப்பி, பலகாரங்களை வாங்கி உண்பதும், கண்ணாடி கிளாஸ்களை பலர் பார்க்கும் வண்ணம் வாய்வைத்துக் குடிப்பதும், ஒரு கையில் புகைத்துக்கொண்டும் இருப்பதும் தவிர்க்கவும். தயவு செய்து சொந்த டம்ளர், அல்லது தூக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடும் தட்டுக்களை பயன்படுத்துவது நல்லது.

27. சமய சந்தர்ப்ப யாத்திரையை தவிர்த்து மாலை போட்ட அன்று எடுக்கும் முடிவில் மாற்றம் இருக்க வேண்டாம். மண்டலமா! மகரமா! என்று போராட்டம் இல்லாது ஒரே முடிவுடன் யாத்திரை செல்ல வேண்டும். பொதுவாக மாலையிடும் குருநாதன் முடிவில் பொறுப்பில் யாத்திரை நாளை விட்டுவிடவும்.

28. ஒவ்வொரு சாமியும் தன் முகவரி தற்கால இருப்பிடம் முதலியவற்றை எழுதி தனக்குள் 1 சீட்டு வைத்துக் கொள்வது நல்லது. இது எல்லா நல்லது கெட்டதுக்கும் பொருந்தும், ரேஷன் கார்டுகளில் போட்டோ, லைசன்ஸ் சிராக்ஸ் போட்டோ கையில் இருப்பது நல்லது, எளிதில் அடையாளம் காட்டும்.

29. யாத்திரையின் போது தனியாக சென்று காடுகளில் உள்ளே மலஜலம், சிறுநீர், கழிப்பதை தவிர்க்கவும் எப்போதும் கூட ஒரு சாமிமாரை கூட்டிச் செல்வது நலம்.

30. மலைக்கு யாத்திரை செல்லும் முன் வீட்டை விடும் முன்தேங்காய் உடைத்து, பெரியவர்களை நமஸ்கரித்து, மலைக்கு போய்வருகிறேன் என்று சொல்லிக்கொள்ளாமல், ஐயன் அனுக்கிரகத்தால் மலை யாத்திரை செல்கிறோம் என்று சொல்லி யாத்திரைக்கு கிளம்புதல் நல்லது. யாத்திரை முடிந்து வந்ததும் அதே போல் சிதர் தேங்காய் உடைப்பது அவசியம்.

31. 18ம் படி ஏறும்போது 1 தேங்காய் 18ம் படி இறங்கும் போது 1 தேங்காய், வீட்டை விடும் முன் வாசலில் 1 தேங்காய், மஞ்சமாதா உருட்ட 1 தேங்காய் ஆக 5 தேங்காய் யாத்திரைக்கு. பிறகு மேற்கொண்டு தேங்காய் உடைப்பது அவரவர்கள் இஷ்டம், வசதியை பொருத்தது.

32. வீடு என்றால் நான்கும் இருக்கும். சகோதரிகள், துணைவியார் வீட்டுவிலக்கு ஆகும் நேரத்தில் தனி இடமோ, ரூமோ பார்த்து தங்க முடியாத நிலையில், கூடிய வரையில் அவர்களை மறைவில் இருக்கும்படி செய்து நாம் இருக்கும் இடத்திலேயே ஓரமாக இருந்துகொள்ளலாம். தவறிப்போய் துக்க காரியக்காரர்கள், தீட்டானவர்களை சந்திக்க நேரிட்டால், பார்க்க நேரிட்டால் கொஞ்சம் பசுஞ்சாணத்தை தலையில் வைத்துக்கொண்டு குளிக்கவும். சாணம் கிடைக்காத பட்சத்தில் விராட்டி துண்டை தலையில் வைத்துக்கொண்டு குளித்துவிடவும். தீட்டானவர்களை மனதில் கடிந்து அவர்களிடம் கோபம் கொள்ள கூடாது.

குடும்பத்தில் மகள், சகோதரி திடீர் என்று வயதுக்கு வரும் வாய்ப்பு உள்ளது. சடங்குகளை நிறைவேற்ற தந்தை, சகோதரர்கள் இருக்க வேண்டிய நிலையில் மாலையை கழற்றி விடுவது நல்லது. மாலை அணிந்த காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம், திருவிழா, சடங்குகளில் உணவு சாப்பிடுவதை தவிர்த்தல் நல்லது. மாலை போட்ட நேரத்தில் திருமண ஏற்பாட்டுக்கு பெண் பார்த்தல், நிச்சயதார்த்தம் செய்வது ஆகாது. கூடப்பிறந்தவர்களுக்கு நடத்தும் சுப காரியத்தில் ஈடுபடலாம். உணவு சுத்தமானதாக இருந்தால் உண்ணலாம்.

33. கூட்டு பஜனை செய்வது நலம். அன்னதானம் பிரதானம். பஜனைக்கு செல்லும் அன்பர்கள் அடுத்த வீட்டில் உள்ள பொருள்களை தொடக்கூட கூடாது.

34. தீட்சை (தாடி வளர்ப்பது) என்பது பெறும் கடுங்குளிர், மழை சீதோஷ்ணநிலையை கட்டுப்படுத்தவே. வெறுங்காலுடன் நடத்தல் மலையில் காலணி இன்றி நடக்க ஒத்திகை பார்ப்பது போன்றது. போலீஸ், மில்டரி பணியாளர்கள் பணியின் போது அவரவர்கள் காலணி, மூடுகாலணி அணிந்தும், மற்ற நேரங்களில் இல்லாமல் இருத்தல் நல்லது. தற்காலத்தில் சுத்தமில்லாத சாலைகள், காலணி இல்லாமை, செருப்பு இன்றி நடத்தல் சுகாதார சீர்கேடுதான், இருந்தாலும் ஓரளவு சுத்தமான இடத்தை பயன்படுத்தி நடந்து செல்லவும்.

35. தெருவுக்கு தெரு ஐயப்பன் கோவில் கட்டுவது என்று இல்லாமலும் குறிப்பட்ட இடங்களில் உள்ள ஐயப்பன் கோவிலை சென்று வணங்கலாம். சீசன் கடவுள் போல அல்லாமல், வருடம் முழுவதும் ஐயனை வணங்குதல் நலம். சபரிமாலை போட்ட அனைத்து ஆலயங்களுக்கும் செல்லலாம். மேலும் ஐயன் கோவில் கட்டுகின்றோம், பெரிய அளவில் வழிபாடு என்று நோட்டீஸ் அடித்து முடிந்த அளவு பொருள் உதவி செய்யவும் என்பதை தவிர்க்கவும். சொந்த செலவில் செய்வது நலம். முடிந்ததை தர பக்தர்கள் முன் வரட்டும் அது போதும்.

36. மாதா மாதம் சபரி மலை திறக்கின்றனர். மாதா மாதம் போகும் ஐயப்ப பக்தர்கள் 1 வருடம் சென்றால், 12 மலை ஆகிறது. அதை மனதில் கொண்டு மலைகளை கூட்டி சொல்லி தற்பெருமை கொள்ள வேண்டாம். ஒரே குருசாமி மகர மண்டலபூஜைக்கு 7 தடவை கூட்டி செல்லும் அன்பர்கள். செல்வந்தர்கள் வாகன உரிமையாளர்கள் இருப்பார்கள். இருப்பினும் குரு தன்னை அடக்கிக் கொண்டு வருடம் 1 முறை படி மிதிப்பவரே போற்றுதற்கு உரியவர். அப்படியே பல தடவை 1 மண்டலத்துக்குள் செல்லும் குரு, தன் சொந்த யாத்திரையின் போது 1 முறை மட்டுமே 18ம் படி மிதித்து இருமுடி சுமந்து செல்லவேண்டும். மற்ற நேரத்தில் பலதடவை சென்றால் இருமுடி இன்றி பக்க வாயிலில் ஏறி ஐயனை தரிசனம் செய்வது நல்லது. கூப்பிட்ட குரலுக்கு குரு சென்றால் மதிப்பு இல்லாமல் போய்விடும். சீசன் குருசாமி ஆகிவிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. கன்னி சாமிகள் பம்பை, எரிமேலியில் பக்தர்கள் சமைக்கும் அடுப்பு சாம்பலை 108 அடுப்புகளில் சேர்த்து எடுத்து அதை சுத்தப்படுத்தி வஸ்திரத்தில் போட்டு வஸ்திரகாயம் செய்து அதை தினசரி திருநீறாக பயன்படுத்தலாம். நோய்நொடி உள்ளவர்களுக்கு அணிவிக்கவும். சமையல் பாதி நடக்கும் போது தொந்தரவு செய்ய கூடாது.

38. யாத்திரை முடிந்து ஊர்திரும்பும்போது அவசரப்பட்டு குருவின் குழுவை விட்டு விலகி விரைந்து ஊர் வருவது தவறு. யாத்திரை ஆரம்ப இடத்திற்கே திரும்ப குழுவுடன் வந்து பானக பூஜை செய்து விரதம் முடித்து மாலை கழற்றுதல் நல்லது. யாத்திரை விரதகாலத்தில் இருந்த நற்பண்புகள், ஒழுக்கநிலை உணவு கட்டுப்பாடு, பக்தி மாறாமல் மற்ற நாட்களும் அப்படியே இருக்க ஐயனை பிரார்த்தனை செய்யவும். வீடு வந்த பின்பே முடி இறக்கிக்கொள்ளுதல், வேறு இடங்களுக்குச" செல்லுதல், ஆகாத போகாதப் பொருட்களை வாங்குதல், பிரசாதம் தர வேண்டும் என்ற நோக்கில் வழியில் விற்கும் பழங்களை கூடை கூடையாக வாங்குதல், பிரசாதம் என்று நடுவழியில் விற்கும் விபூதி குங்குமத்தை வாங்கி கலந்து தருதல் தவறு. வெளியூர் சுற்றுலா சென்று நாம் திரும்பவில்லை. மேலும் யாவற்றையும் துறந்து சபரி செல்லவில்லை. போகும்போது உள்ள புத்தி திரும்ப வந்ததும் இருக்க வேண்டும்.

39. மூன்றாம் மலைக்கு செல்பவர் மணி கட்ட வேண்டும் என்பதெல்லாம் தற்போது புது வழக்கம். நேர்த்தி கடன், வேண்டுதல் இருந்தால் மணிகட்ட வேண்டும். சன்னதியில் இருந்து கட்டி உள்ள மணியை கட்டாயம் எடுத்து வரக்கூடாது. ஆடம்பரத்தை தவிர்த்து சாதாரணமாக எளிய முறையில் மலை செல்ல வேண்டும். பொதுவாக அடுத்தவர் செலவில் சபரி செல்லாது, தன் பொருள் கொண்டு செலவு செய்து யாத்திரை முடிப்பது நல்லது.

40. யாத்திரை செல்லும் அன்பர்கள் நேரடியாக சபரி சென்று தரிசனம் முடித்து வரும்போது பல கோவில்களை தரிசிப்பது நல்லது. பெருங்கூட்டத்தோடு யாத்திரை செல்வதை விட 10, 15 பேருடன் செல்வது நல்லது. பொதுவாக ஸ்திரீகள் தனிக்குழுவாக செல்வது நல்லது. 50, 60 வயதுக்கு மேற்பட்ட நடக்கக்கூடிய பெண்மணிகள் மலை செல்ல ஏற்றது. பெரும்பாலும் டோலியில் (மனிதனை மனிதன் தூக்குவது) செல்வதை தவிர்க்கவும்.

41. விரத காலங்களில் மெத்தை, தலையணை நீக்கி, துண்டு, சுத்தமான போர்வையை பயன்படுத்தி படுத்தல் நலம். தவறிப்போய் தூண்டுதல் பேரால் பிரம்மச்சர்யம் போய் குடும்ப வாழ்வில் ஈடுபட நேர்ந்தால் யாரிடமும் சொல்லாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவிடம் மட்டும் மனம் சரியில்லை, தவறுதல் மனதில் என்று நினைத்து மாலை கழற்றுதல் நல்லது.

42. பிரம்மச்சர்ய காலங்களில் அதிக வெங்காயம், பூண்டு, உயர் வகை பழங்களை உண்ணாது, வீரியத்தை கட்டுக்குள் வைப்பது நல்லது. உடல் நல கட்டுப்பாட்டிற்கும் ஏற்றது.

43. சதா சர்வ காலமும் தர்ம, பக்தி சிந்தனை இருத்தல் வேண்டும். முக்கியம் வீடுகளில் அதிகம் தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்க்க வேண்டும். மனைவி மற்றவர்களை சகோதர பாசத்தில் பார்க்க வேண்டும்.

விரத காலங்களில் முடிந்த அளவு அருகில் உள்ள ஆலயங்களுக்கு சென்றும், அன்பர்களை ஆலயங்களில் சந்தித்து, கூடி யாத்திரை விபரங்கள் மற்றும் யாத்திரை பொருட்கள், வழிபாடு, பஜனை குறித்து ஆலோசிப்பது நல்லது. ஒவ்வொரு சாமியையும் அவரவர் வீடுகளில் சென்று பார்க்காமல் பொது இடத்தில சந்திப்பது பல விதங்களில் நல்லது.

44. மாலை கழற்றிய பின்பும் 1 மண்டலம் நோன்பு இருந்த அதே அளவு பக்தி, பண்பாடு, தர்ம சிந்தனையுடன் இருக்கவும்.

45. யாத்திரை முடிந்து தன் இருப்பிடம் வந்ததும், சாமிகள் யாத்ரையில் நடந்த நல்லதை சொல்ல வேண்டும். யாத்திரையில் நடந்த தவறான சண்டை, காணாதவற்றை கண்டதான வதந்தி, ஐயன் இவருக்கு மட்டும் காட்சி அளித்தது போன்றதும், மிகைப்படுத்தப்பட்ட சம்பந்தமில்லாத வதந்திகளையும் சொல்லக்கூடாது. மலையில் தான் பெற்ற அனுபவங்களை நன்கு தொகுத்து பக்தி பரவும்படி எடுத்துரைப்பது நல்லது. யாவரும் ஒரே இனம் ஒரே குலம் கோட்பாட்டில் அறத்தை வளர்த்து தர்மத்தை நிலை நாட்டி தொடர்ந்து பதினெட்டாம் படி மிதித்த ஐயன் ஐயப்பனை துதிப்போமாக.

**சாமியே சரணம் ஐயப்பா!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தாவளம் அதன் விசேஷங்கள்

**1. எரிமேலி :**

சபரிமலை ஐயன் முதன் முதலில் பேட்டை துள்ளி சபரிக்கு நடக்க ஆரம்பித்த இடம். அவர் ஆரம்பித்த இடத்தில் தங்கி யாவரும் வித்தியாசமின்றி உடலில் கரும்புள்ளி, செம்புள்ளி போன்று கலர் பவுடரை தடவிக்கொண்டும், இலை, தழைகளை தலையில் கட்டியும், பலூன் போன்றவைகளை கட்டிக்கொண்டும், "ஐயன் திந்தகதோம் சாமி திந்தக்கதோம்" என்று தன்னை மறந்து ஆடிப்பாடி சாஸ்தாவை ப்ரதக்ஷினம் செய்து பிறகு வாபரையும் ப்ரதக்ஷினம் செய்து பின்பு எரிமேலி தர்மசாஸ்தாவை வலம் வந்து நமஸ்கரித்து கையில் உள்ள காம்பு இலை, காய்களை போட்டு விட்டு எரிமேலி தோட்டில் ஸ்நானம் செய்து பிறகு தன் இருப்பிடம் சென்று சமைத்து சாப்பிடலாம். துள்ளிக் குதிக்கும் போது பூசணி, பரங்கி கிழங்கினை எடுத்துச் சென்று தூளி கட்டி ஆடிப்பாடி மகிழ்ந்து அதே காய்கறிகளை சமைப்பது நல்லது. சாப்பாடு ஓய்வு எடுத்து விடியற்காலையில் எரிமேலி ஸ்ஸ்தாவிற்கு காய் அடித்து, நேராக இருமுடி தாங்கி வாவரை இன்னுமொரு முறை வலம் வந்து நமஸ்கரித்து வாவர் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு நடைபாதை யாத்திரையை தொடங்கலாம்.

மரத்தால் செய்த சிறு அம்பு, வாள் இதை எடுத்துக்கொண்டு கன்னி சாமி புறப்பட வேண்டும்.

**2. பேரூர்தோடு : (வாய்க்கால்)**

எரிமேலியிலிருந்து 3, 4 கி. மீட்டருக்குள் பேரூர்தோடு ஐயன் பூங்காவனம் ஆரம்பமாகும் இடம்.

**3. காளைக்கெட்டி ஆசிரமம் :**

ஐயன் அழுதா நதியில் மர்த்தனம் செய்து நர்த்தனம் புரிவதை காணவந்த சிவ, பார்வதி ரிஷபத்தை (காளையை) மரத்தில் கட்டியதாக ஐதீகம். இந்த இடத்தில் சிவ, பார்வதி கோவில் தரிசனம் செய்து வெடி வழிபாடு செய்தல் முக்கியம்.

**4. அழுதா நதி :**

மஹிஷியை ஐயப்பன் தேவலோகத்திலிருந்து எரிந்ததாகவும் பின் மஹிஷியின் மேல் குதித்து நர்த்தனம் செய்த இடம். இவ்விடம் ஸ்நானம் செய்ய நல்லது. குளிக்கும்போது ஒரு சிறு கல் எடுத்து அதை வரும்போது கல்லிடுங் குன்றில் இடுவது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. அழுதா மேடு (இஞ்சிப்பாறைக்கோட்டை)**

அழுதாமேடு அழுதை நதியின் மேல் உள்ள மேடான மலை, மேலும் அழுதை சைடு பாதை வாழைத்தோட்டம், அரியக்கட்டி, குழிமாவு பாதை, பொதுவாக அழுதாமேடு ஏறி இஞ்சிப்பாறை கோட்டை, உடும்பாறை மலை அடைந்து தேங்காய், வெடி வழிபாடு செய்வது நலம்.

**6. முக்குழி :**

அழுதா இறக்கம் அரியக்கட்டி வழியாகவும் வந்து முக்குழி அடையலாம்.

**7. எலவந்தாவளம் :**

புதுச்சேரி ஆறு தாவளம். இந்த இடத்தில் புதுச்சேரி ஆறு ஓடுகிறது. இவ்விடம் அனைத்து மிருகங்களும் நீர் பருக வரும். நல்ல தீர்த்தம். கரிமலை அடிவாரம். ஸ்வாமிகள் பெரிய கரிமலை, கரிமலை ஏறுமுன் இவ்விடம் தங்கி வெறும் வயிற்றில் கஞ்சி செய்து குடித்து விட்டு, உடம்பை எளிதாக்கி கரிமலை ஏற உதவும் அடிவாரம். பின் கரிவலாம்தோடு.

**8. கரிமலை மேடு :**

இந்த மேடு ஏறும் போது மேலே சிலு சிலுப்பு காற்று. இம்மலை ஏறி உச்சிக்கு வரும்போது பம்பை வந்தது போன்ற உணர்வு. இங்கு ஊற்று போன்ற கிணறு உள்ளது. தாகசாந்திக்கு ஏற்ற நீர். மணிகண்ட பிரபு தன் சரத்தினை (அம்பு) விட்டு ஒரு கிணறு எடுத்ததாக ஐதீகம். கரிமலை பகவதி இங்கு உள்ளது. கரிமலை பகவதியே சரணம் என்று கூறி வழிபாடு செய்தல் அவசியம்.

**9. பெரியானை, சிறியானை வட்டம்**

**பம்பா நதி :**

இறைவன் பிறந்த இடம். இவ்விடம் கரிமலை இருந்து இறங்கியதும் தங்கி பின் பம்பையில் ஸ்நானம் செய்து தர்பணம், மற்றும் பம்பா சக்தி என்ற அன்னதானத்தை செய்து வஸ்திர தானம் செய்து பம்பா விளக்கை தரிசித்து செல்லலாம். குச்சிகளை வைத்து கூட்டு மெழுகுவர்த்தி, அகல்விளக்கு வைத்து மாலை நேரத்தில் பம்பை நதியில் தெப்பமாக விடுதல் பம்பா விளக்காகும். பம்பையில் பித்ருக்களுக்கு அவசியம் தர்பணம் செய்வது மிக உத்தமம். காசி பலன் பம்பைக்கு உண்டு. பம்பா நதியே சரணம் ஐயப்பா! சரணம் சொல்லவும்.

**10. நீலிமலை விநாயகர் கோவில் :**

இவ்விடத்தில் சிறிய பாதை வந்து சேருகிறது. சாலக்காயம் பம்பா பஸ் நிறுத்தம் அருகில். இவ்விடம் விநாயகர், ராமர், அனுமார் கோவில் பூஜை முடித்து நீலிமலையில் வன தேவதைக்கு பிடித்த எள்ளு, வெல்லம், பொரி உருண்டைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளத்தில் போட்டு ஆராதனை செய்து மலை மேல் ஏறுதல். கொஞ்சம் தள்ளி எதிரே அமைந்துள்ள காந்தமலை அதுவே பொன்னம்பல மேட்டை தரிசனம் செய்தல். மகர விளக்கு தெரியும் இடம்.

**11. சபரிபீடம் :**

நீலி ஏறி சற்று சம தரை இடத்தில் சபரிக்கு ராமர் மோட்சம் தந்த இடம். பீடத்தை சுற்றி வலம் வந்து தேங்காய் உடைத்து, வழிபாடு செய்து புறப்படல். இங்கிருந்தும் மகரவிளக்கு தரிசனம் செய்யலாம்.

**12. சரங்குத்தி அல் :**

ஐயப்பன் இந்த இடத்தில் தான் அம்பை நிலை நிறுத்தி, ராஜனை கோவில் கட்ட சொன்ன இடம். பந்தளத்திலிருந்து ஏவிய அந்த சரம் விழுந்த இடம் சரங்குத்தி, எரிமேலியிலிருந்து ஏவிய அந்த சரம் கன்னி சாமிகள் இங்கு சொருக வேண்டிய இடம்.

**13. சந்நிதானம் :**

விஸ்வகர்மாவால், தேவர்கள் சேர்ந்து கட்டிய 18ம் கருங்கல்படி சத்யமான பொன்னும் பதினெட்டாம் படி. 18 சித்தர்கள் வழிபட்ட படிகள். அஷ்டமாசித்தி கிடைக்கும் படிகள். மெதுவாக தொட்டு கும்பிட்டு இருமுடியுடன் ஏறுதல் அவசியம். தேங்காய் உடைத்து ஏறுதல் முக்கியம். தற்போது கவசம் அணிந்த படிகளாக உள்ளது. படி ஏறியதும் கொடிமரம் தரிசித்து, ஐயனை வலம் வந்து தரிசனம் செய்து பின்பக்கமாக இறங்குதல். சன்னதியில் உள்ள கன்னி மூலகணபதி, நாகராஜாக்களை தரிசனம் செய்வது மிக மிக அவசியம்.

**14. மாளிகைப்புரம் :**

பின்பக்கம் இறங்கி நேராக பஸ்மகுளம் சற்று வடமேற்காக உள்ள மாளிகைப்புரத்தம்மாள் ஆலயத்துச் சென்று தேங்யாயை வலமாக கீழே உருட்டி கோயிலுக்கு இடப்பக்கம் உள்ள கருப்பரை ஆராதனை செய்து மணிமண்டபத்தை தரிசனம் செய்வது அவசியம். தேவி பாராயணம் வேள்வி, போன்றவைகளை மணிமண்டபத்தில் செய்வது நல்லது. பின்பு வாபர் ஸ்வாமியை சுற்றி வந்து தரிசனம் செய்து தங்குமிடம் தேர்ந்தெடுக்கலாம்.

**15. மகரஜோதி : (விளக்கு)**

மண்டல பூஜைக்கு செல்லும் அன்பர்கள் பூஜை மட்டும் காணலாம். மகர விளக்கு சன்னதி எதிர் பொன்னம்பல மேடு, காந்த மலையில் தைத்திங்கள் முதல் நாள் மலையில் 6 மதல் 6.30 க்குள் தேவர்கள் நடத்தம் தீபாரதனை போன்ற காட்சியை மகர விளக்காக காணலாம். இது மகர ஜோதியாகத் தெரிகிறது என ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. திருவாபரணம் :**

பகவானுக்கும், அம்மனுக்கும் உரிய நகைகள் பந்தளத்திலிருந்து பக்தர்கள் பெட்டியில் வைத்து உயரே பருந்து பறக்க எடுத்து வருவார்கள். பம்பையில் தங்கி அந்த ஆபரணப்பெட்டிக்கு வழிபாடுகள் நடத்தி பின்னர் ஆடி பாடி கோவில் மரியாதையுடன் வருவார்கள். பந்தளராஜா பல்லக்கில் அதன் பின் வருவார்கள். பந்தளராஜா பரம்பரை குடை நட்டு தங்கி முக்கிய பம்பா நதிக்கரையில் இருந்து பிரசாதம் வழங்கி பின் சபரிக்கு வருவர். திருவாபரணம் பெட்டி சாத்தி தீபாரதனை செய்யும்போது மகர விளக்கு காந்தமலையில், (பொன்னம்பல மேட்டில்) தெரியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பாடல்கள்



வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவ புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே (வெள்ளிக்)

அகமும் புறமும் இருப்பவனே
அடியார் துணைதனை துடைத்தவனே
ஆற்றோரத்திலும் குளக்கரை தனிலும்
அமர்ந்து அரசாட்சி புரிபவனே (வெள்ளிக்)

அகந்தை அழித்திடும் ஐங்கரனே
அன்பில் உறைந்திடும் குணநிதியே
அன்னை தந்தையையும் வலமாக வந்து
அருள் மாங்கனியை பெற்றவனே (வெள்ளிக்)

கணநாயகா எங்கள் கணநாயகா
கணங்களின் நாயகனே கணநாயகா
துணை நீயடா சுவாமி துணை நீயடா
துயர்தன்னை தீர்த்திடுவாய் கணநாயகா

மலைநாயகா எங்கள் கணநாயகா
மலைக்கோட்டை வாழுகின்ற மலைநாயகா
மருந்தாகையா மன மருந்தாகையா
மனத்துயரை தீர்க்க நீயும்மருந்தாகையா

பகை தீரய்யா படை பகை தீரையா
பலம் தன்னை தந்து நீயும் பயம் தீரைய்யா
பார் நீயடா என்னைப் பார் நீயடா
பார் போற்றும் நாயகனே பார் நீயடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா

மூஷிக வாஹன சரணம் கணேசா
மோதகஹஸ்தா சரணம் கணேசா
வாமன ரூபா சரணம் கணேசா
மஹேஸ்வர புத்ரா சரணம் கணேசா (கணேச சரணம்)

சங்கர சுதனே சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சாமர கர்ணா சரணம் கணேசா
விளம்பித சூத்ரா சரணம் கணேசா (கணேச சரணம்)

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஆறுமுக வேலனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்துவைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

அவல் பொறி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார்
(பிள்ளையார்)

கலியுகத்து விந்தைகளை காணவே அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவணபவகுக சரணம் சரணம்
சிலைமலை யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவறு மொருவரை சரணம் சரணம்
உமைசிவன் அம்பிகை சரணம் சரணம்
அரஹர சிவசிவ சுத கணபதி சரணம்
அடியவர் வினைகெட அருள்பவ சரணம்
நினைபவர் பவமற நினைபவ சரணம்
நெடியவன் விழி தரு நெடியவ சரணம்
வலவையை மருவிய புயதர சரணம்
வடிவினில் உயரிய பெரியவ சரணம்
முறைதெரி மறையவ நிறையவ சரணம்
முடியடி தெரிவரு முதியவ சரணம்

கணபதியே சுவாமி கணபதியே
காத்தருள வேண்டுமையா கணபதியே (கணபதியே)

மூலமுதற் பொருளே கணபதியே
முன் நின்று காத்திடுவாய் கணபதியே (கணபதியே)

மூஷிக வாகனனே கணபதியே
முக்கண்ணனார் தன் மகனே கணபதியே (கணபதியே)

சந்தனத்தில் குளித்திடுவான் கணபதியே
சந்தம் மெம்மை காத்திடுவான் கணபதியே (கணபதியே)

சர்வலோக நாயகனாம் கணபதியே
சஞ்சலங்கள் நீக்கிடுவான் கணபதியே (கணபதியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரீ நந்தன கஜானனா //
கிரிஜா நந்தன நிரஞ்சனா //
பார்வதி ந்நதன சுபானனா //
பாஹிப்ர போமாம் பாஹிபிரசன்னா // (கௌரி)

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதி தேவா //
மாதா பார்வதி பிதா மஹா தேவா //
கஜானனா கஜானனா //
கஜானனா ஜெய் கணபதி தேவா // (ஜெய்)

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
மூஷிகவாஹன கஜானனா மோதகஹஸ்தா கஜானனா
ஸ்யாமளகர்ண கஜானனா விளம்பித சூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேஸ்வர புத்ரா கஜானனா
விக்னவிநாயக கஜானனா தவபாத நமஸ்தே கஜானனா
(பாஹி)

ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச பாஹிமாம்
ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச ரக்ஷமாம்

வாரணத்து நாயகா வலம்புரி வினாயகா //
பாரில் சக்தி சிவனணைக்கும் வல்லபை வினாயகா //

கரணை செய் கிருபாகரா கார்த்திகேயன் ஸோதரா //
ஓம் எழுத்தின் தத்வ ப்ரணவ ரூபனே வினாயகா

ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச பாஹிமாம்
ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச ரக்ஷமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்கள்



வேல் வேல் வேலவனே வேலாயதா - எங்கள்
வினைக் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா
(வேல் வேல்)

கந்தா கடம்பா வேலாயுதா - எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா - எங்கள்
திருப்பரங்கித்தீரனே வேலாயுதா (வேல் வேல்)

சோலைமலை கிழவனே வேலாயுதா - எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)

பழநிமலை முருகனே வேலாயுதா - எங்கள்
பலவினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)

சுவாமிமலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்ரமண்ய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)

திருத்தணிகை முருகனே வேலாயுதா - எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

ஓம் முருகா ஜெய முருகா //
சரவணா சண்முகா சிவசக்தி பாலா //
(ஓம் முருகா)
ஓம் சரவணபவ தேவாஸ்கந்தா //
சூரசம்ஹாரா மாயோன் மருகா //
(ஓம் முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி //
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி

வேல்முருகன் நாமத்திலே வித விதமாய் காவடி //
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி //

சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி //
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி //

பழநிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி //
தென்பழநி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி //

ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி //
வண்ண வண்ண காவடி கந்த வேலன் காவடி //

சரவணா சிவகுமாரா சண்முகநாதா ஜெய் ஜெய்
சண்முகநாதா
சுப்பிரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா //
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முநாதா //
சரணம் சரணம் சண்முகநாதா - ஓம்
சரணம் சரணம் சண்முகநாதா (சரவண)

வள்ளி மோஹனா புள்ளி மயில் வாஹனா //
ஆறுமுகக் கந்தனே சுந்தர வதனா //
குமர குரு பரசண்முக வடிவேலவா //
முருகா ஹரி முருகா சிவ சக்தி பாலகா //
(வள்ளி மோஹனா)

சரவணபவ குக ஓம் முருகா //
இருவினை கெடவர அருள் முருகா //
பக்திபுரிவாசா சாயி முருகா //
சிவ முருகா ஹர ஹர முருகா //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்

சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்

சிவ சரவணபவ சுப்ரமண்யம்
குரு சரவணபவ சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய நீ வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே நீ வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே நீ வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா நீ வா வா முருகா
ஓங்கார தத்துவமே நீ வா வா முருகா
ஔவைக் குபதே சித்தவா நீ வா வா முருகா
அகில லோக நாயகனே நீ வா வா முருகா
ஹரக ரோரா சாமி ஹரக ரோகரா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
கதிர்காம வேலனுக்கு அரஹரோ ஹரா
கந்தப்ப சுவாமிக்கு அர்ஹரோ ஹரா
திருப்பரங்கிரித் தீரனுக்கு அரஹரோ ஹரா
திருச்செந்தூர் வேலனுக்கு அரஹரோ ஹரா
திருப்பழநிச் செல்வனுக்கு அரஹரோ ஹரா
திருவேகரப் பாலனுக்கு அரஹரோ ஹரா
குன்றிலாடும் குமரனுக்கு அரஹரோ ஹரா
குஞ்சரி தன் கணவனுக்கு அரஹரோ ஹரா
குறவள்ளி காந்தனுக்கு அரஹரோ ஹரா
குணம் கடந்த வேலனுக்கு அரஹரோ ஹரா
சோலை மலைக் கிழவனுக்கு அரஹரோ ஹரா
சொகுசுகர முருகனுக்கு அரஹரோ ஹரா
சிவசக்தி வடிவனுக்கு அரஹரோ ஹரா
சிங்கார வேலனுக்கு அரஹரோ ஹரா
அகங்கார நாசருக்கு அரஹரோ ஹரா
அன்கர்களின் நேயருக்கு அரஹரோ ஹரா
ஓங்காரத் த்துவர்க்கு அரஹரோ ஹரா
ஓம் சக்தி தந்தவர்க்கு அரஹரோ ஹரா
அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா

சரவணா சிவகுமாரா
சண்முக நாதா ஜெய் ஜெய் சண்முகநாதா
சுப்ரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா
சண்முக நாதா ஜெய் ஜெய் சண்முகநாதா
சரணம் சரணம் சண்முகநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் பாடல்கள்



நம பார்வதி பதயே ஹரஹர மஹாதேவா
தென்னாடுடைய சிவனே போற்றி -
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
சிவ கடக்ஷம் - பரிபூரணம்

ஹரஹர போலா சிவசிவ போலோ
பம்பம் போலோ போலோநாத் போலோநாத் (ஹர)
நந்திவாகன நாகபூஷண சந்த்ரசேகர ஜடாதர
கங்காதார கௌரிமனோகர கிரிஜாகாந்த ஸதாசிவ (ஹர)

கைலாஸவாஸா கனகசபேசா கௌரிமனோகர விச்வேசா
ஸ்மசானவாஸா திகம்பரேசா நீலகண்ட மஹாதேவ (ஹர)
சூலாதரா ஜோதிப்ரகாசா விபூதி சுந்தர பரமேசா
பம்பம் பம்பம் டமருக நாதா பாாவதிரமண ஸதாசிவ (ஹர)

சங்கரசிவா சிவ சங்கரசிவா
சம்போ மகாதேவா சாம்பசிவா (சங்கர)

எமன்மிகப் பொல்லாதவன் விடமாட்டான் - அவன்
சிவன்நாமம் சொல்வதென்றால் தொடமாட்டான் (சங்கர)

நாமன் பெரும் வல்லான்விட்டுச்செல்லவேமாட்டான் - அவன்
நாராயணன் பக்தன் என்றால் கொல்லவே மாட்டான் (சங்கர)

ஆற்றல்மிகு கூற்றுயார்க்கும் அஞ்சவே மாட்டான்-அவன்
ஐயப்பன் பக்தன் என்றால் அணுகவே மாட்டான் (சங்கர)

மாயைநம்மை தொடரும்போது மயங்கவேண்டாம் - அந்த
மணிகண்டன் பெயர் சொல்ல மறக்க வேண்டாம் (சங்கர)

கவலைகொண்டு நித்தம்மனம் கலங்க வேண்டாம் - அந்த
காருண்யன் பெயர் சொல்ல மறக்க வேண்டாம் (சங்கர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் வந்து சூழ்ந்தபோது துடிக்க வேண்டாம் - அந்த
தூயன் நாமம் சொல்ல தயங்கவேண்டாம் (சங்கர)

ஆபத்து வேளை தன்னில் அயரவேண்டாம் - அந்த
ஐயப்பன் பெயர் சொல்ல தளரவெண்டாம் (சங்கர)

ஆடிடும் பெருமான் நடமாடிடும் பெருமான்
ஆடாதாரை ஆடவைத்து தானும்ஆடும் பெருமான் (ஆடிடும்)

காணாதாரை காணவைத்து காட்சி தரும் பெருமான்
பாடாதாரை பாடவைத்து பாட்டிசைக்கும் பெரமான் (ஆடிடும்)

கூடாதாரை கூடவைத்து கூத்தாடும் பெருமான்
கேளாதாரை கேட்கவைத்து தானும் கேட்கும் பெரமான்
(ஆடிடும்)
சேராதாரை சேரவைத்து தானும்சேரும் பெருமான்
நாடாதாரை நாடவைத்து நடனமாடும் பெருமான் (ஆடிடும்)

சங்கரசிவ, சங்கரசிவ, சங்கர சிவசம்போ (சங்கர)
ஜெயசங்கர, ஜெயசங்கர, ஜெய சங்கரசம்போ (ஜெய)
சிவசங்கர, சிவசங்கர சிவ சங்கரசம்போ (சிவசங்கர)
ஆடிடும்)

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமிப்பியா நடராஜா

என்னப்ப னல்லவா என்தாயு மல்லவா
பொன்னப்ப னல்லவா பொன்னம் பலத்தவா (என்னப்ப)

ஆடிய பாதமே அம்பல வாணரே
சிதம்பரத்தில் வாழும் சிவகாமி நேசரே (என்னப்ப)

ஆலால சுந்தரம் அற்புத சுந்தரம்
அற்புத சுந்தரம் அழகான சுந்தரம் (என்னப்ப)

காமாக்ஷி சுந்தரம் மீனாட்சி சுந்தரம்
கல்யாண சுந்தரம் கடம்பவன சுந்தரம் (என்னப்ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாய பரமேஸ்வராய சசிசேகராய நம ஓம் ஓம் ஓம்
பவாய குணசம்பவாய சிவதாண்டவாய நம ஓம் ஓம் ஓம்
(சிவாய)

சிவ சிவ சிவ சிவ சிவாய நமஓம்
பவ பவ பவ பவ பவாய நமஓம்
ஓம் சிவ சிவ சிவ சிவ சிவாய நமஓம்
பவ பவ பவ பவ பவாய நமஓம் (சிவாய)

சிவாய நமஓம் பவாய நமஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாய நமஓம்
ஓம் நமசிவாய சிவாய நமஓம்
பவ பவ பவ பவ பவாய நமஓம் (சிவாய)

சம்போ கங்காதரா கௌரி மனோகர
கௌரி மனோகர கங்கா ஜடாதர

கங்கா ஜடாதர சந்த்ர கலாதர
சந்த்ர கலாதர சாம்ப சதாசிவ

அரஹர சிவசிவ அம்பலவாணா
ஆனந்த தாண்டவ அம்பலவாணா
தில்லையம்பல அம்பலவாணா
சிவகாமி நேசா அம்பலவாணா
கற்றை சடையோனே அம்பலவாணா
கனக சபேசா அம்பலவாணா
சிற்ப பேசா அம்பலவாணா
சிதம்பர நேசா அம்பலவாணா
பொன்னம் பலவனே அம்பலவாணா
வெள்ளியம் பலவனே அம்பலவாணா
அம்பலவாணா அம்பலவாணா
ஆடியபாதா அம்பலவாணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

பார்வதி மணாளனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

கங்கையை தரித்தவனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

ஆடும்பாம் பணிந்தவனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

தில்லையின் நடராஜனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)

நெல்லையின் அப்பனே ஓம் சிவாய சங்கரா
சசிதரனே சுந்தரேச ஓம் சிவாய சங்கரா (ஓம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் பாடல்கள்



சமயபுரத்தாளே மாரியம்மா - அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா
(சமயபுரத்தாளே)

மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம்
அரிசி மாவிளக்கு ஏற்றி வைத்து
பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா
அம்மா தூயவளே என் தாயே மாரியம்மா
(சமயபுரத்தாளே)

பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டு திசைகளையும் ஆள்பவளே
அம்மா ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா
(சமயபுரத்தாளே)

கத்தி கதறுகிறோம் கேட்கலையோ
தாயே கல்லேதான் உன் மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே
எங்கள் உமையவளே தாயே மாரியம்மா
(சமயபுரத்தாளே)

காலிற் சலங்கை ஒலி காதைத் துளைக்குதம்மா
பாவாடை தாவணியும் தானாக ஆடுதம்மா
பூவாடை வீசுதம்மா பூமகளே உனக்கு
பாமாலை கொண்டு வந்தோம் பாரம்மா
(சமயபுரத்தாளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்து நாயகியே - எங்கள் முத்து மாரியம்மா

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரியம்மா

உன்பாதம் சரண் அடைந்தோம்

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

கலகத்தரக்கர்பலர்

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

கருத்தினுள்ளே புகுந்து விட்டாள்

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

பலகற்றும் பலகேட்கும்

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

பயனொன்றும் இல்லையடி

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

நிலையெங்கும் காணவில்லை

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

நின்பாதம் சரணடைந்தோம்

எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய ஜகன்மாதா

ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய லலிதாம்பா

சந்திமௌலீஸ்வரி சங்கரி சங்கரி //
மங்களப்ரதாயினி மதனகோடி சுந்தரி //
மாதவஹரி சோதரி தேவி ஜெகன் மோகினி
(சந்திரமௌலீஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாத செஞ்டாச்சி மாகாளி
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)

கொஞ்சும் சதங்கை ஒலி கெட்குதம்மா - உன்
கெண்டை கூத்துக்கண்டு மணம் குளிருதம்மா (அஞ்சாத)

செஞ்சடையை அலங்கரிக்கும் நாகம்மா - உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகம்மா (அஞ்சாத)

பாலாபிஷேகம் செய்து மாகாளி - உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

தேனாபிஷேகம் செய்து மாகாளி - உன்
சேவடியை சேவித்திடுவோம் திரிசூலி (அஞ்சாத)

செவ்வரளி மாலை போட்டு மாகாளி - உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)

மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி - உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

சமயபுர மாரியம்மா மாகாளி - எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

வேற்காட்டு கருமாரி மாகாளி - எங்கள்
எங்களை நீ காத்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

தஞ்சமென்று வருவோர்க்கு மாகாளி - அம்மா
கண் திறந்து காட்சி தருவாய் திரிசூலி (அஞ்சாத)

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் முத்துமாரி
எங்கள் குலம் காக்க வந்திடுவாள் அன்னை முத்துமாரி
(அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத ஜோதி அவள் எங்கள் முத்துமாரி
உலகனைத்தும் காப்பாள் எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரணடைந்தோம் அம்மா முத்துமாரி
(அம்மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா மஞ்சமாதா எங்கள் அழகு மஞ்சமாதா
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை மஞ்சமாதா
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் மஞ்சமாதா
எங்கள் குலம் காக்க வந்திடுவாள் அன்னை மஞ்சமாதா
(அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் மஞ்சமாதா
மங்காத ஜோதி அவள் எங்கள் மஞ்சமாதா
உலகனைத்தம் காப்பவளே அம்மா மஞ்சமாதா
உன்பாதம் சரணடைந்தோம் அம்மா மஞ்சமாதா
(அம்மா)

சபரியிலே கோயில் கொண்ட எங்கள் மஞ்சமாதா
மங்கயரை காத்தருளும் அன்னை மஞ்சமாதா
மாங்கல்யம் தந்திடுவாய் எங்கள் மஞ்சமாதா
மாளிகை புரத்தழகி அன்னை மஞ்சமாதா

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடதே

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புலிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வருபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு பாடல்கள்



ஜெய் சத்யநாராயண மூர்த்திக்கு – ஜெய்
ஜெய் ஜானகி காந்தாஸ்மரனே –
ஜெயஜெய ராம்ராம்
கோபிகா ஜீவனாஸ்மரனே – கோவிந்தம், கோவிந்தம்
சர்வத்திர கோவிந்தநாம சங்கீர்த்தனம் –
கோவிந்தம், கோவிந்தம்

ராமராம ராம் ராமராம ராம்
ராமராம ராமராம ராமராம ராம்
ராமராம ராம் ராமராம ராம்
ராமராம ராமராம ராமராம ராம்

ஆனந்த ராமராம ராம்
கோவிந்த ராமராம ராம்
கோபால ராமராம ராம்
சீதாபி ராமராம ராம்
(ராமராம)

ராமராம ராமராம ராமராம தாரகம்
ராமகிருஷ்ண வாஸுதேவ பக்திமுக்தி தாயகம்
ஜானகி மனோஹரம் ஸர்வலோக நாயகம்
சங்கராதி ஸேவ்யமான புண்யநாம கீர்த்தனம். (ராம)

ராம்ராம் ராம்ராம் ராம்ராம் ஹரே ஹரே
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
கிருஷ்ண ஹரே ஹரே
ஹரேராம ஹரேராம ராமராம ஹரே ஹரே
ஹரேராம ஹரேராம ராமராம ஹரே ஹரே
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண கிருஷ்ண
கிருஷ்ண ஹரே ஹரே (ராம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிந்த மோரே கோவிந்த மோரே - அந்த
கோகுல வாசனுக்கு கோவிந்த மோரே (கோவிந்த)

திருப்பதி வாசனுக்கு கோவிந்த மோரே - அந்த
ஸ்ரீரெங்க நாதனுக்கு கோவிந்த மோரே (கோவிந்த)

பாண்டு ரெங்கனுக்கு கோவிந்த மோரே - அந்த
பாண்டரி நாதனுக்கு கோவிந்த மோரே (கோவிந்த)

கோபி அணிந்தவனுக்கு கோவிந்த மோரே - அந்த
கோபால கிருஷ்ணனுக்கு கோவிந்த மோரே (கோவிந்த)

கோவிந்தம் போடுவோம் எல்லோரும் கோவிந்தம் போடுவோம்
கோவிந்தம் போடுவோம் எல்லோரும் கோவிந்தம் போடுவோம்
ஏழுமலைவாசனுக்கு கோவிந்தம் போடுவோம்
ஏழைபங்காளனுக்கு கோவிந்தம் போடுவோம்
வெங்கட ரமணனுக்கு கோவிந்தம் போடுவோம்
சங்கர ஹரனுக்கு கோவிந்தம் போடுவோம்
புரட்சி சனிக்கிழமை கோவிந்தம் போடுவோம்
பண்டரீக தலைவனுக்கு கோவிந்தம் போடுவோம்
அலர்மேலு நாதனுக்கு கோவிந்தம் போடுவோம்
அசலோடு வட்டியும் சேர்த்து கோவிந்தம் போடுவோம்

தாந்திமித்திமி நந்த கோபாலா தீந்திமித்திமி நந்த கோபாலா
ஆனந்த கோபாலா அருள் செய்வாய் கோபாலா (தாந்தி)

ஆயிரெத்தெட்டு வட்டமும் கண்டேன் - அந்த
வட்டத்துள் நின்றதும் கண்டேன்
மாயிருஞாலத்து நாற்றெட்டும் பார்த்தேன் - அந்த
மனத்துறுஞ் சந்தேகம் தீர்த்தேன் (தாந்தி)

மண்ணாதி பூதங்கள் ஐந்தையும் கண்டேன் - மாய
விகாரங்கள் யாவையும் விண்டேனே
விண்ணெளி மொளியை மெய்யினும் கொண்டேன் - மேதினில்
வாழ்வினை மேலாக வேண்டேன். (தாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு கொண்ட வாசா - நீஎக்கட போற ஐயா
அக்கட இக்கட போவா சாமி - நீ இக்கட வாயா ஐயா (ஏழு)
திருப்பதி வாசா - நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போவா சாமி - நீ இக்கட வாயா ஐயா (ஏழு)
பாண்டு ரெங்க நாதா நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போவா சாமி - நீ இக்கட வாயா ஐயா (ஏழு)
குருவாயூர் அப்பா - நீ எக்கட போற ஐயா
அக்கட இக்கட போவா சாமி - நீ இக்கட வாயா ஐயா (ஏழு)

கோவிந்தஹரே கோபாலாஹரே கோவிந்த கோவிந்த கோபாலா ஹரே
கோவிந்தா கோபாலா கோவிந்த கோவிந்த கோபாலா (கோவிந்த)
பாண்டுஹரே ரெங்காஹரே பாண்டு பாண்டு ரெங்காஹரே
பாண்டு ரெங்கா பாண்டு பாண்டு ரெங்கா (கோவிந்த)
கிருஷ்ணாஹரே ராமாஹரே கிரஷ்ணா கிருஷ்ணா ராமாஹரே
கிருஷ்ணா ராமா கிருஷ்ணா கிருஷ்ணா ராமா (கோவிந்த)
விட்டல்ஹரே வேணுஹரே விட்டல் விட்டல் வேணுஹரே
விட்டல் வேணு விட்டல் விட்டல் வேணு. (கோவிந்த)

ராதே ராதே ராதே ராதே கோவிந்தா
ராதே கோவிந்தா பிருந்தாவன சந்திரா
அனாதநாதா தீனபந்தோ ராதே கோவிந்தா

பாண்டுரெங்கா பண்டரிநாதா ராதே கோவிந்தா
நந்த முகுந்தா பரமானந்தா ராதே கோவிந்தா
புராண புருஷா புண்ய ஸ்லோகா ராதே கோவிந்தா
வேணு விலோலா விஜய கோபாலா ராதே கோவிந்தா

நந்த முகுந்தா நவநீத சோரா ராதே கோவிந்தா
ராமா கிருஷ்ணா கிருஷ்ணா ராமா ராதே கோவிந்தா
புராணபுருஷா புண்ய ஸ்லோகா ராதே கோவிந்தா
கோ சம்ரக்ஷகா கோபீநாதா ராதே கோவிந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தன நந்தன கோபாலா நவநீத சோரா கோபாலா
வேணு விலோலா கோபாலா - விஜய கோபாலா கோபாலா
ராதா கிருஷ்ண கோபாலா - ரமணிய வேஷா கோபாலா
காளிய மர்த்தன கோபாலா - கௌஸ்துப பூஷண கோபாலா (நந்)

முரளீ லோலா கோபாலா - முகுந்த ப்ரியா கோபாலா
ராதா ரமணா கோபாலா - ராஜீவ நேத்ரா கோபாலா
யசோத பாலா கோபாலா - யதுகுல திலகா கோபாலா
நளின விலோசன கோபாலா - கோமள வாசனா கோபாலா (நந்)

புராண புருஷா கோபாலா - புண்ய ஸ்லோகா கோபாலா
கனகாம் பரதர கோபாலா - கருணாமூர்த்தே கோபாலா
கஞ்ச விலோசன கோபாலா - கஸ்தூரி திலகா கோபாலா
வெண்ணை யுண்டவா கோபாலா - வெங்கடேசா கோபாலா (நந்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தர்மசாஸ்தா அஷ்டோத்திர ஸதநாமங்கள்

| | | |
|---|---|---|
| ஓம் | மஹா சாஸ்த்ரே | நம |
| ஓம் | மஹா தேவாய | நம |
| ஓம் | மஹா தேவஸுதாய | நம |
| ஓம் | அவ்யாய | நம |
| ஓம் | லோக கர்த்ரே | நம |
| ஓம் | லோக பர்த்ரே | நம |
| ஓம் | லோக ஹர்த்ரே | நம |
| ஓம் | பராத் பராய | நம |
| ஓம் | த்ரிலோக ரக்ஷகாய | நம |
| ஓம் | தன்விநே | நம |
| ஓம் | தபஸ்விநே | நம |
| ஓம் | பூத ஸைனிகாய | நம |
| ஓம் | மந்த்ரவேதினே | நம |
| ஓம் | மஹாவேதினே | நம |
| ஓம் | மாருதாய | நம |
| ஓம் | ஜகதீச்வராய | நம |
| ஓம் | லோகாத்யக்ஷாய | நம |
| ஓம் | அக்ரண்யே | நம |
| ஓம் | ஸ்ரீமதே | நம |
| ஓம் | அப்ரமேய பராக்ரமாய | நம |
| ஓம் | ஸிம்ஹாரூடாய | நம |
| ஓம் | கஜாரூடாய | நம |
| ஓம் | ஹயாரூடாய் | நம |
| ஓம் | மஹேச்வராய | நம |
| ஓம் | நாநாசஸ்த்ரதாய | நம |
| ஓம் | அநர்க்காய | நம |
| ஓம் | நா நா வித்யா விசாரதாய | நம |
| ஓம் | நா நா ரூப தராய | நம |
| ஓம் | வீராய | நம |
| ஓம் | நாநாப்ராணி நிஷேவகாய | நம |
| ஓம் | பூஜேசாய | நம |
| ஓம் | பூஜிதாய | நம |
| ஓம் | ப்ருத்யாய | நம |
| ஓம் | புஜங்கரபரணோத்தமாய | நம |
| ஓம் | இக்ஷிதன்விநே | நம |
| ஓம் | புஷ்ப பாணாய | நம |
| ஓம் | மஹா ரூபாய | நம |
| ஓம் | மஹாப்ரபுவே | நம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | மாயாதேவீஸுதாய | நம |
| ஓம் | மான்யாய | நம |
| ஓம் | மஹா நீதாய | நம |
| ஓம் | மஹா குணாய | நம |
| ஓம் | மஹா சைவாய | நம |
| ஓம் | மஹா ருத்ராய | நம |
| ஓம் | வைஷ்ண வாய | நம |
| ஓம் | விஷ்ணு பூஜகாய | நம |
| ஓம் | விக்னேசாய | நம |
| ஓம் | வீரபத்ரேசாய | நம |
| ஓம் | பைரவாய | நம |
| ஓம் | ஷண்முகத்ரு வாய | நம |
| ஓம் | மேருச்ருங்க ஸமாஸீனாய | நம |
| ஓம் | முனிஸங்கநிஷேவிதாய | நம |
| ஓம் | தேவாய | நம |
| ஓம் | பத்ராய | நம |
| ஓம் | ஜகந்நாதாய | நம |
| ஓம் | கணநாதாய | நம |
| ஓம் | கணேச்வராய | நம |
| ஓம் | மஹா யோகினே | நம |
| ஓம் | மஹா மாயினே | நம |
| ஓம் | மஹாக் ஞானினே | நம |
| ஓம் | மஹா ஸ்திராய | நம |
| ஓம் | தேவ சாஸ்த்ரே | நம |
| ஓம் | பூத சாஸ்த்ரே | நம |
| ஓம் | பீமஹாஸ பராக்ரமாய | நம |
| ஓம் | நாக ஹாராய | நம |
| ஓம் | நாக கேசாய | நம |
| ஓம் | வ்யோம கேசாய | நம |
| ஓம் | ஸநாதனாய | நம |
| ஓம் | ஸுகுணாய | நம |
| ஓம் | நித்யாய | நம |
| ஓம் | நிர்குணாய | நம |
| ஓம் | நித்ய த்ருப்தாய | நம |
| ஓம் | நிராச் ரயாய | நம |
| ஓம் | லோகாச் ரயாய | நம |
| ஓம் | கணாதீசாய | நம |
| ஓம் | சது ஷஷ்டி கலாமயாய | நம |
| ஓம் | ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ரூபிணே | நம |
| ஓம் | மல்லகா ஸுரபஞ்ஜனாய | நம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் த்ரிமூர்த்தயே நம
ஓம் தைத்ய மதனாய நம
ஓம் ப்ரக்ருதயே நம
ஓம் புருஷோத்தமாய நம
ஓம் கால ஞானினே நம
ஓம் மஹா ஞானினே நம
ஓம் காமதாய நம
ஓம் கமலேக்ஷணாய நம
ஓம் கல்பவ்ருஷாய நம
ஓம் மஹாவ்ருக்ஷாய நம
ஓம் வித்யா வருக்ஷாய நம
ஓம் விபூதி தாய நம
ஓம் ஸம்ஹார தாபவிச்சேத்ரே நம
ஓம் பசுலோக பயங்கராய நம
ஓம் ரோக ஹந்த்ரே நம
ஓம் ப்ராண தாத்ரே நம
ஓம் பரகர்வ விபஞ்ஜனாய நம
ஓம் ஸர்வ சாஸ்த்ராத்த தத்வக்ஞாய நம
ஓம் நீதி மதே நம
ஓம் பாப பஞ்ஜனாய நம
ஓம் புஷ்கலா பூர்ணா ஸம்யுக்தாய நம
ஓம் பரமாத்மனே நம
ஓம் ஸதாங்க தயே நம
ஓம் அனந்தாதித்ய ஸம்காசாய நம
ஓம் ஸுப்ரஹ்மண்யானு ஜாய நம
ஓம் பலினே நம
ஓம் பக்தானு கம்பினே நம
ஓம் தேவே சாய நம
ஓம் பகவதே நம
ஓம் பக்த வத்ஸலாய நம

ஓம் ஸமஸ்த நானாவித பரிமள
மந்த்ர புஷ்பம் அர்ச்சனம் ஸமர்ப்பயாமி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக் கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்த மலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மை பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பிலாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
